# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. *1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.* Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 43-ம் இலக்கம்


## பாப்பரசரின் ஆசனக்கோவில்

திருச்சபைப் பஞ்சாங்கத்தின்படி கார்த்திகைத்திங்கள் ஒன்பதாம்நாள் ரோமாபுரியிலுள்ள லத்தறன் மகாதேவாலயம் திவ்வியஇரட்சகருக்கு அர்ப்பணிக்கப்பட்ட திருநாளாகும். பரிசுத்தபாப்பரசரின் சொந்தஆசனக்கோவிலாகஇருந்துவருவதும், அர்ச். லத்தறன்அருளப்பர் மகாலயம்என அழைக்கப்பட்டுவருவதுமான இத்தேவாலயத்தின் புராதனப்பெயர் திவ்வியஇரட்சகரின்மகாதேவாலயம் என்பதை அறிவார் மிகச்சிலரே. இது ஆலயங்களுக்கெல்லாம் தாயும், எசமாட்டியுமான ஆலயம்எனக் கௌரவிக்கப்பட்டு வருகின்றது. இதன்காரணமாக, ரோமாபுரியிலுள்ள கத்தோலிக்கதிருச்சபையின் நான்குபிரதானமகாலயங்களில் முதலாவதான அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்திற்கு அடுத்தஸ்தானத்தில் இதுமிளிர்கின்றது.

அர்ச். லத்தறன் அருளப்பர் மகாதேவாலயத்தின் பாரம்பரியமும், வரலாறும் மிகப்பழமையும், மகத்துவமுமானவை. ஆகவேதான் பாப்பரசரொருவரால் இவ்வாலயம் மகாதேவாலயங்களின்வரிசைக்கு உயர்த்தப்படலாயிற்று. அத்துடன் இது ரோமாபுரியிலுள்ள அர்ச். பேதுருவானவர் மகாதேவாலத்துக்கு முன்னரே கட்டப்பட்டதென்பதையும் நாம் இங்கு நினைவுகூர்தல் வேண்டும். ரோமைச்சரித்திரத்தில் முக்கியமானதோர் இடத்தை வகிக்கும் கொன்ஸ்தந்தின்சக்கரவர்த்தி மனந்திரும்பிய பின்னர் இவ்வாலயத்தைக் கட்டியெழுப்பினர். ஆதியில் இவ்வாலயம் ரோமைப்பிரபுக்களுளொருவனான லத்தறனுஸ் என்பவரின் மாளிகையாகவே கட்டப்பட்டது. இப்பிரபு ரோமைச்சக்கரவர்த்தியான நீரோவுக்கெதிராகச்செய்த சதிமுயற்சி அம்பலமாகியபோது சக்கரவர்த்தி இம்மாளிகையை அப்பிரபுவிடமிருந்து கைப்பற்றினர்.

லத்தறனுஸ்மாளிகையை ஆலயமாக மாற்றியமைக்கும்பணியைச் சக்கரவர்த்திகொன்ஸ்தந்தீன் ஆரம்பித்தார். கட்டுவேலைகள் ஆரம்பமானபோது சக்கரவர்த்திதானே இப்புனிதகைங்கரியத்தில் பங்குகொள்ளும்படி பழைய ஆடைகளைத் தரித்தவராய்க் கட்டுவேலையாட்களோடு தாமுமொருவராய்நின்று வேலைசெய்தாரெனச் சொல்லப்படுகின்றது. கட்டுவேலைகள் பூர்த்தியானதும் கி. பி. 313-ம்ஆண்டிலே அப்போது திருச்சபையை ஆண்டுகொண்டிருந்த மெல்கியடெஸ் பாப்பானவரிடம் இரட்சகரின் ஆலயம் எனும்நாமத்துடன் இது கையளிக்கப்படலாயிற்று. இவ்வாலயத்தினருகே அர்ச். ஆசீர்வாதப்பர்சபைச் சந்நியாசிகளின் ஆச்சிரமத்துடன் இணைந்ததான— சுவிசேஷகஅருளப்பருக்கும், ஸ்நாபகஅருளப்பருக்கும் அர்ப்பணிக்கப்பட்டதான சிற்றாலயமொன்றிருந்தது. இந்தச்சந்நியாசிகளால் பராமரிக்கப்பட்டுவந்த இவ்வாலயம், கொன்ஸ்தந்தீன்சக்கரவர்த்தி ஞானஸ்நானம் பெற்ற அதேயிடத்திலேயே அமைந்திருந்தது. காலக்கிரமத்தில் இங்குஅமைந்திருந்த கட்டடங்கள்யாவும் ஒருங்கே லத்தறன் என்னும்பெயரால் அழைக்கப்படலாயிற்று. இந்த ஆலயம் தனக்கென வேறோர்நாமத்தைக் கொண்டிருப்பினும் அர்ச். லத்தறன் அருளப்பர் ஆலயம் எனவே அழைக்கப்படலாயிற்று.

இம்மகாதேவாலயம் தனது ஆரம்பகாலங்களிலிருந்தே பலவிதபாரதூரமான இன்னல்களைச் சமாளிக்கவேண்டியதாயிற்று. தீயினாலும், பூமியதிர்ச்சிகளினாலும், மிலேச்சசாதியினரின் படையெடுப்புகளாலும், கட்டடத்தின் பலபகுதிகளும் பலதருணங்களில் சிதைவுற்றன. இதன் காரணமாகப் பலதடவைகளில் புனர்நிர்மாணத்துக்குள்ளாக நேரிட்டது. ஆயின் இன்று உலகமெங்கணுமிருந்து ரோமையைநோக்கிச்செல்லும் யாத்திரிகர்கட்குப் பண்டைய ரோமைச் சக்கராதிபத்தியத்தின் பெருமையையும், மத்தியகாலதிருச்சபையின் இருளடைந்தவரலாறுகளையும் ஒருங்கேஎடுத்தோதும் புராதனசின்னமாகமிளிர்கின்றது.

ஆலயங்களுக்கெல்லாம் தாயும், எசமானியுமான இவ்வாலயம் கத்தோலிக்கதிருச்சபைச் சரித்திரத்தின் தொன்மைக்கும், புனிதத்துக்கும் சான்றுபகரும் எண்ணரிய—எக்காலமும் தேடுதற்கரிய சின்னங்களையெல்லாம் தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றுள் பொன்வெள்ளியாலான சம்பேதுரு, பாவுலு அப்போஸ்தலர்களின்சிரங்களின் உருவஅமைப்பு பிரசித்திபெற்றது. ஆலயத்திலே பாப்பரசரின் பீடத்திற்கு மேலாகவுள்ள உயரிய மாடியில் பாதுகாக்கப்படும் இக்கலைச் செல்வங்கள் பிரதான திருநாட்களில் மட்டுமே பொதுசனபார்வைக்காகத் திறந்துவைக்கப்படுகின்றன.

அர்ச். இராயப்பரால் திவ்விய பலிபூசைகளின்போது பாவிக்கப்பட்டதும், பின்னர் திருச்சபைச் சரித்திரத்தின் இருளடைந்தகாலமென வர்ணிக்கப்படுவதான வேதகலாபனைகளின்போது 'கற்றகோம்ப்' எனப்படும் நிலவறைகளில் பாப்புமார் பதுங்கியிருந்த வேளைகளில் பாவிக்கப்பட்டதுமான மரத்தாலாய பீடமொன்று இவ்வாலயத்தில் பாப்பானவரது பீடத்தின் கீழே காணப்படுகின்றது.

நற்கருணைப்பேழையின் மேலாகவுள்ள மாடப்புரையொன்றில் காணப்படும் மேசையானது, நம்முடையதிருஇரட்சகர் கடைசிஇராப்போசனவேளை பந்தியமர்ந்த அதேமேசையெனக் கருதப்படுகின்றது. இவ்வாலயத்தின் புகழுக்குக்காரணமானதென்று வர்ணிக்கப்படுவது ஓர் ஞானஸ்நானத் தொட்டியேயாகும். உலகத்தின் மிகப்பழமைவாய்ந்த ஞானஸ்நானத்தொட்டியென இதுகருதப்படுகின்றது. இத்தொட்டி எண்கோணமுடையதும், பச்சைப்பளிங்குக்கற்களாலானதுமாகும். இங்கு ஏழாம்நூற்றாண்டில் கெடவெல என்னும் ஆங்கிலோ-சாக்சனிய மன்னன் ஞானஸ்நானம்பெற்றதாகச் சரித்திரம் சான்றுபகருகின்றது.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)



பாப்பரசரின் சுபதின விழாவைக் கொண்டாடுமுகமாக

**8-11-59** ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் **4-30** மணிக்கு

ஆசனக்கோவில் மைதானத்தில்

**பிள்ளைகளின் ஆடம்பர அணிவகுப்பு ஒன்று நடந்தேறும்.**

# திரிகோணமலை மேற்றிராசன ஐக்கியசங்க ஆண்டுவிழா

திரிகோணமலை மேற்றிராசனஐக்கிய சங்கத்தின் 32-வதுஆண்டு மகாநாடு மட்டுநகர், புளியந்தீவு அர்ச். மரியநாயகி ஆலயத்தில் திரிதினஆராதனைகளுடனும், பூசைபிரசங்கங்களுடனும் ஆரம்பமானது.

1959-ம்ஆண்டு ஐப்பசித்திங்கள் ஞாயிற்றுக்கிழமைகாலை பெரியபாடற்பூசைநடைபெற்று, அதனைத்தொடர்ந்து புளியந்தீவுக் கத்தோலிக்கசங்கத்தாரால் காலைப்போசனம் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டது. காலை9 மணிக்கு அர்ச். மிக்கேல்கல்லூரியில் கிழக்குமாகாணம்முழுவதும் பரந்திருக்கும் பலபங்குகளிலிருந்தும் பிரதிநிதிகளாக நூற்றுக்கணக்கானோர் மகாநாட்டிற்குச் சமுகமீந்தார்கள். மேற்றிராசன விக்கார்ஜெனறல் மிகவண. ஜெறோம் டிசாசுவாமியவர்களும், கத்தோலிக்கசேவைக் குழுவினங்களின் முதன்மைத்தலைவர் வண. ஈ. கிறவுதர், எஸ். ஜே. சுவாமியவர்களும் மகாநாட்டிற்குச் சமுகந்தந்தார்கள். மகாநாடு திரு. யோசெவ் ஜே. டேவிட் அவர்கள் தலைமையில் பலகுருமார், பிரதிநிதிகள் சமுகமாயிருக்க ஆரம்பமானது. முதலில் பரிசுத்தபாப்பரசரின் ஆசீர் அளிக்கப்பட்டது.

மேற்றிராசன விக்கார்ஜெனறல் சுவாமியவர்கள் தமதுபுத்துரையில்: மேற்றிராசனசங்கமும், அதனோடு இணைக்கப்பட்டுள்ள கத்தோலிக்க சேவைக் குழுவினங்களும் பல்வேறு திட்டமிட்டுப் புதியமுறையிற் பணியாற்ற முன்வரவேண்டும்; நாம்எல்லோரும் ஐக்கியமாய் ஒன்றுபட்டுழைக்கவேண்டும்; கிளைச்சங்கங்கள் தாய்ச்சங்கத்துக்கு முட்டுக்கட்டையாயிராது அத்தோடுஐக்கியமாய்ச் சீரிய முறையில் பணிபுரியவேண்டும்; கிளைச் சங்கங்களின் பூரணஒத்துழைப்பு மிகமிகஅவசியம்என்பதைப் பங்குக்குரவர்கள் சிந்திக்கவேண்டும்; நமது கீழைத் தேசமக்களின் பண்பாடும், ஒழுங்குமுறைகளும் அந்நியநாட்டுச் செல்வாக்கால், நவநாகரிகமான — சன்மார்க்கத்துக் கெதிரான கர்ப்பத்தடைமுறைகளைக் கையாளுவதால் இழுக்குக்குள்ளாகின்றன; இது மனிதனின் சுதந்தரத்தையும், இயற்கையாற்றலையும மட்டந்தட்டுகின்றது; எனவே, இவ்வருவருக்கத்தக்க புதியநோய் நமது கத்தோலிக்கசமூகத்தில் இடம்பெறுதிருக்க முளையிலேயே அதைக்கிள்ளியெறியவேண்டும்எனக்கூறி ஆசிபகர்ந்தார்.

அதன்பின் வண. ஹென்றி பொன்னையாசுவாமிகளும், வைத்தியமேதை சி. சவரிமுத்துஅவர்களும் தத்தம்பேச்சில் செயற்கைக் கர்ப்பத்தடைபற்றிக் கூறியவிடத்து: இது சன்மார்க்கமுறையாலும், சமய,சாத்திர, வேதாகமங்களாலும், பாப்புமாராலும் தள்ளிவைத்துப் புறக்கணிக்கப்பட்டுள்ளது; இத்தீயபழக்கம் நமதுநாட்டிலே காட்டுத்தீபோலப் பரவிவருதலை நாம் கண்மூடித்தனமாயிருந்து கவலையற்றோர்போல் வாழாது பாதுகாப்புத் தடைபோட முயற்சிக்கவேண்டும்; இச்செயற்கைமுறையினால் தெய்வம் அருளும் மக்கட்பேறு இல்லாதொழியவே காலப்போக்கில் இப்பூவுலகு மனிதசஞ்சாரமற்ற வனாந்தரநிலையை அடையும்; இதனைக்கையாளுவோர் புலனடக்கமற்றுப் பாழடைந்த வீடு போலாவார்கள்; மூளைக்கோளாறுகளுக்கும் இது காரணமாகவும் கூடும் எனப் பலவைத்தியநிபுணர்கள் உணர்கிறார்கள்; இதைத்தொடர்ந்து நரம்புத்தளர்ச்சி, உடல்நலக்குறைவு, புற்றுநோய்தானும் பெண்ணினத்தையும் பாதிக்கக்கூடும்; இச்செயற்கைத் தடைக்கருவிகளை உபயோகப்படுத்துவதால் இனஉணர்ச்சியற்றுக் கணவனின்கோபத்துக்கும், மனக்கசப்புக்கும் இலக்காகி ஈற்றில் குடும்பக்குலைவையும், சந்தேகத்தையும் வளர்த்துக் கேட்டையே அடையநேரிடும்; ஏழைமக்களின் ஏழ்மையைஅகற்ற இம்முறையைக் கையாடுகிறதாகப் பிரசாரம் செய்கிறார்கள்; ஏழ்மை குறைவடைவதற்குப்பதிலாக நோயும்நொடியும், பாயும்படுக்கையுமாய்த் தலைவன் தலைவியர் வாதைப்படப் பசிபட்டினியும், அதைத்தொடர்ந்து குடும்பங்களைச் சர்வநாசஞ் செய்துவிடுகின்றது; முதலாளி இனத்துமக்கள் தங்கள் பெரும்பொருட்குவியலை ஏழைகளுக்குத் தாராளமாய்க் கூலிமுறையிலும், ஈகைவழியிலும் வரையாதுவழங்கினால் நாட்டில் மக்கள் பெருக்கம் அடைந்து நாடுபெருமையடையும்; இதனையுணராத செல்வந்தர் இத்தடைமுறையால் தங்கள் செல்வக்குவியலுக்குப் பாதுகாப்புத் தேடுகிறார்களென்றே கூறலாம்; இயற்கையோடு இறைவன்வாழுகிறான்; இயற்கையை அடக்கிச் செயற்கையை வெல்லவழிதேடுகிறார்கள் ஒருசில போலிவாதிகள் எனக்கூறினர்.

பின்னர் சேவாமுதன்மைத் தலைவர் சுவாமி வண. ஈ. கிறவுதர், எஸ். ஜே. அவர்கள் இம்மேற்றிராசன ஐக்கிய சங்கம் கத்தோலிக்கஉணர்ச்சி உருக்கொண்டமக்களால் பொதுநலங்கருதி ஆற்றப்படும் பலதியாகங்களாலும், செயல்களாலும் நிரம்பியதாயிருக்க வேண்டும்; இத்தகையசேவையும், தாழ்ச்சியும் உள்ளவர்களே இத் தொண்டுக்கு அருகதையுள்ளவர்கள்; இது பாராளுமன்றம்போன்ற வாதவிவாத அரங்கல்ல; குறைநிறைகளைக் கலந்துரையாடி ஆக்கப்போக்கில் கருமமாற்றும் ஓர்சூழ்நிலைக்களன்எனக்கூறி, இதன் நோக்கத்திற்கமையத் தொழிலாற்ற நம்மைஆக்கிக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

அதன்மேல் சங்கஅக்கிராசனர் தமது பேச்சில் ஐக்கியத்தையும், ஒத்துழைப்பையும் தாம் கோருவதாகக்கூறி, எதிர்காலத்திற் சகலபங்குகளும் பங்கெடுக்குமெனத் தாம்எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துநின்றார்.

அதன்பின் அடுத்தஆண்டிற்குரிய புதியஉத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

தலைவர்: திரு. யோசேவ் ஜே. டேவிட் அவர்கள், உபதலைவர்: திரு. பீ. சி. இருகல், திரு. சி. சவரிமுத்து, திரு. எம். பெனடிக்ற், காரியதரிசி: திரு. கே. எல். இராஜேந்திரம், உபகாரியதரிசி: திரு. எஸ். ஈ. கமலநாதன், தனாதிகாரி: திருமதி எவ். ஆர். திசைவீரசிங்கி அம்மையார். கூட்டம் காரியதரிசியின் நன்றியுரையுடன் நிறைவெய்தியது அன்றுமாலை பட்டினத்தின் மூன்றுபங்குகளிலுமிருந்து ஏராளமான கத்தோலிக்கசேவைக் குழுவினங்கள் தத்தம்விருதுகளேந்திப் பவனியாய் அர்ச். மரியநாயகி ஆலயத்திற்குச்சென்று அங்குமேற்றிராணியாண்டகையவர்களின் பிரதிநிதியான விக்கார்ஜெனறல் மிகவண. ஜெறோம் டிசாசுவாமிகளுக்குப் பிரமாணிக்கந் தெரிவித்து, ஆலயத்தினுட்சென்று ஆராதனைகளிற் பங்குகொண்டன. அதைத்தொடர்ந்து அர்ச். மிக்கேல் கல்லூரிமண்டபத்தில் இப்பட்டினப் பகுதியிலுள்ள பலகலாசாலைகளால் இனிய கீதநடனங்களும், நடிப்புத்திறனமைந்த நாடகங்களும் நிறைந்த கதம்பநிகழ்ச்சிகளோடு மகாநாட்டின் நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

---

சுமார்186மைல் குறுக்களவுள்ள கடற்பரப்புஒன்று சந்திரனின் மறுபக்கமிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாய்ச் சோவியற்விஞ்ஞானிகள் கூறியுள்ளனராம். இதற்கு “மஸ்கோக்கடல்” என்று பெயரிடப்பட்டிருக்கிறதாம். சந்திரனின் மறுபக்கம்பற்றிய புகைப் படங்கள் பூமிக்குக் கிடைத்தபிறகே இந்தக்கடலும், பிறவும்கண்டறியப்படலாயின.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

**இல. M. B. 1910**

வண்ணார்பண்ணை கிழக்கு
சுப்பையா பொன்னம்பலம் கந்தையா
— வழக்காளி.
எதிராக
கொக்குவில் மேற்கு
பொன்னையா கணபதிப்பிள்ளை
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M. B. 1910-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகளை 1959-ம் ஆண்டு மார்கழி மாதம் 5-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் (5-12-59) 3 மணிதொடக்கம் முறைப்படி அந்தந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 2317-ம், இன்னும் ரூபா 2000-த்திற்கு 1-11-57 தொடக்கம், 22-5-58 வரைக்கும், 15% வட்டியும், பின்பு கூட்டுத் தொகைக்குஇறுபடும்வரைக்கும்,100-க்கு 5% வட்டியும், கோட்டுச் செலவு 185 ரூபா 42 சதமும்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு, உடுவில் கோயிற்பற்று, தாவடி இறை “வேலப்பெருமாள் வளவும். “குருவத்தை வளவு” என்னும் காணி. ப. நில. இலா. $3\frac{1}{4}$ உம், இதில் வீடும், செய்பயிர் வான்பயிரும், வடகிழக்கில் இருக்கும் புதுக்கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்கால்பாவிப் புருத்தும். எல்லை: கிழக்கு—நன்னியர் சிங்கத்தின் உரிமைக்காரரின் ஆதனம். வடக்கு—நன்னியர் தருமரின் ஆதனமும், மேற்கு, தெற்கு—ஒழுங்கை. இதுஅடங்கலும் இதைச்சேர்ந்தவைகளும் பதிவு இல. H. 245/159.

2. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் நல்லூர் கோயிற்பற்று, கொக்குவில் மேற்கிறை “குதியாஞ்சு வளவு” அல்லது, “சூரியாஞ்ச” வளவு. ப. நில. இலா. 2-உம். வடகிழக்குப் பக்கத்திலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும், பயிர்களும். எல்லை: கிழக்கு—விஞசி சண்முகத்தின் ஆதனம். வடக்கும், மேற்கும் —தாவடி கிராம எல்லை. தெற்கு—ஒழுங்கை. இது அடங்கலும் அதைச்சேர்ந்தவைகளும். பதிவு இல. D. 187/126.

**தா. செல்லையா,**
கோமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 37, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2535**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

காரைநகர்
பொன்னையா மயில்வாகனம்
— வழக்காளி.
எதிராக
சரசாலை
அருணசலம் நவரெத்தினம்
அல்லது நடராசா
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2535-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1959-ம் ஆண்டு மார்கழிமாதம் 10-ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 2280-ம், இன்னும் ரூபா 2000-த்திற்கு 5-11-58 தொடக்கம் 23-4-59 வரையும், 100-க்கு 12% வட்டியும். பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 192-40 சதம்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி, சாவகச்சேரி கோவிற்பற்று, சரசாலை இறை “மாத்தலாக்காடு” (பர. நில. இலா. 19) பர. நில. இலா. பத்தொன்பது. இதில் (பர. நில. இலா. ஒன்பதரை) பர. நில. இலா. $9\frac{1}{2}$ வடக்குப்பக்கத்தில் இருந்து, எல்லை: **கிழக்கு** — ஏரம்பர் வேலுப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரிய ஆதனம். **வடக்கு** — கந்தர் சுபிரமணியத்துக்குரிய ஆதனம். **மேற்கு**—முடிக்குரிய காணி **தெற்கு**—காசிப்பிள்ளை கைம்பெண் சரவணமுத்துக்குரிய ஆதனம்.

இதடங்கலும் அத்துடன் தெற்குப்பக்கத்தில் இருக்கும் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும், அக்கிணற்றுக்குப் போகும் வழிவாய்க்கால் உரித்தும். பதிவு இல. F. 308 / 149.

**தி. ந. ஆசீர்வாதம்,**
கொம்மிஷனர்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1940**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

வண்ணார்பண்ணை கிழக்கு
சுப்பையா பொன்னம்பலம் கந்தையா
— வழக்காளி.
எதிராக
கொக்குவில் மேற்கு
பொன்னையா கணபதிப்பிள்ளை
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1940-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் மூன்றுதுண்டுக்காணிகளை 1959-ம்ஆண்டு மார்கழிமாதம் 3-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,746-25-உம், இன்னும்ரூபா 1,500-க்குப் 14-11-57 தொடக்கம 22-5-58வரையும் 100-க்குப் 15%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 179ரூபா 92சதமும்.

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோயிற்பற்று தாவடிஇறை, “வேலப்பெருமாள் வளவும், குருவத்தை வளவும்” பர. நில. இலா. மூன்றேகாலும் ($3\frac{1}{4}$), வீடும், செய்பயிர், வான்பயிர்களும், புதுக்கிணறும், வடகிழக்குக் காணியில் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், அதற்குப்போகும் வழிவாய்க்கால் உரித்தும். எல்லை: கிழக்கு — நன்னியர் சிங்கன் உடைய உரிமைக்காரரின் ஆதனம். வடக்கு — நன்னியர் தர்மன் உடைய ஆதனம். மேற்கும், தெற்கும் — ஒழுங்கை. இது அடங்கலும், இதற்குச் சேர்ந்தவைகளும். பதிவு H 300/296.

2. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்கோயிற்பற்று, கொக்குவில் மேற்குஇறை “குதியாஞ்சவளவு அல்லது சூரியாஞ்சவளவு” பர. நில. இலா. இரண்டும் (2), வடகிழக்குக் காணியில்இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்கால் உரித்தும், பயிர்களும். எல்லை: கிழக்கு — விஞசி சண்முகத்துக்குரிய ஆதனம். வடக்கு — தாவடி கிராமஎல்லை. மேற்கு — ஒழுங்கையும், தாவடி கிராமஎல்லையும். தெற்கு — ஒழுங்கை. இது அடங்கலும், அதற்குச் சேர்ந்தவைகளும். பதிவுஇலக்கம் D 187/126.

3. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோயிற்பற்று ஆனைக்கோட்டை இறை, “சமிச்சியடி” பர. நில. இலா. ஆறும் (6), வீடும், பனைமரங்களும், புளியமரங்களும், மற்றும் அதற்குச்சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு — இரத்தினம் பெண் சிவக்கொழுந்துவுடைய ஆதனம். வடக்கு — கல்லியர் வேலுப்பிள்ளையுடைய ஆதனம். மேற்கு — வல்லிபுரம் கந்தையாவுக்கும், பெண் பொன்னம்மாவுக்கும் உரியஆதனம். தெற்கு — ஆறுமுகம் இராசையாவுடையஆதனம். பதிவு இலக்கம் 188/132.

**D. N. ஆசீர்வாதம்,**
2-11-59 கொம்மிஷனர்.

### அர்ச். கூரேதார்ஸின் நூற்ருண்டு

கூரேதார்ஸெனப் பிரஸ்தாபமாக அறியப்படுகின்ற அர்ச். வியான்னி அருளப்பர் பரமபதமடைந்த நூற்ருண்டுவிழாவை முன்னிட்டு ஆர்ஸ்நகரிலும், அயல் இடங்களிலும் நடைபெற்ற கொண்டாட்டங்களிலே உலகின் அநேகபகுதிகளிலிருந்துபோன ஒன்பதுலட்சம் யாத்திரிகர்களுக்குமேல் கலந்திருக்கின்ருர்கள். இவர்களில் ஆறுகருதினல்மாரும், 88 அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரும், 16,000 குருமாரும் அடங்குவார்கள். அர்ச். வியான்னி அருளப்பர் பங்குக்குருமாரின் பாதுகாவலர். அதனல்குருமாரும் அங்கு ஒருதொகையான யாத்திரைகள்நடத்தி விழாக்கொண்டாட்டங்களில் கலந்துகொண்டனர். ஈருந்தவைபவத்தின்போது பிரான்ஸ், லக்ஸெம்பேர்க், சுவிற்சர்லாந்து, எகிப்து ஆகியநாடுகளிலுள்ள 70 மேற்றிராசனங்களிலிருந்து 300 குருமார்சென்று சமுகமளித்தார்கள். அங்கு பிரசன்னமாயிருந்த மேற்றிராணிமார்களில் ஒருவர் ஓர்காலம்ருஷியாவிலே லெனின்கிருட் நகரில் திருத்தொண்டாற்றியவரும், ருஷியாவிலே சிறைபிடித்துச் சைபீரியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட முதற்குருசிரேஷ்டர்களில் ஒருவருமான பொலெஸ்லாவ் சிலொஸ்கான்ஸ் மேற்றிராணியாராவர்.

---

### கத்தோலிக்க இளைஞர்களின் எதிர்ப்பு

பேர்லின்நகர் மேற்றிராசனத்திலே சோவியற்ஆதிக்க பகுதியிலுள்ள 12-க்கும் — 20-க்கும் இடைப்பட்டுள்ள கத்தோலிக்க இளைஞர்களில் 73 சதவிகிதமானேர்கம்யூனிஸ்தயுவர்கள் ஆரம்ப வைபவங்களில் கலந்துகொள்ள மறுத்துவிட்டதாகப் பேர்லின் நகர் மேற்றிராணியாரான கருதினல் டொப்வ்னர் ஆண்டவர் தெரிவித்திருக்கின்ருர். சோவியற்பகுதியிலுள்ள இளைஞர்களில் 81 சதவிகிதமானேர் சமயபாடவகுப்புகளுக்குக் கிரமமாகச் சமுகமளிக்கின்ருர்கள். இவர்களில் 92 சதவிகிதமானேர் உறுதிப்பூசுதலுக்குப் போட்டியாக ஏற்பட்டுள்ள கம்யூனிஸ்தவைபவத்தில் சேர மறுத்துவிட்டார்கள். சோவியற் ஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனியிலே கம்யூனிஸத்தை எதிர்த்துநடத்தும் போராட்டத்தில் கத்தோலிக்கரும், புரொட்டஸ்தாந்தரும் இன்றுநண்பர்களாய்த் தோளோடுதோள் நிற்கிருர்களென்று கருதினல் டோப்வ்னர்ஆண்டவர் தெரிவித்திருக்கின்ருர். அங்கே திவ்வியபூசைநிறைவேற்றுமாறு கத்தோலிக்கருக்கு 3,800 கோவில்களைப் புரொட்டஸ்தாந்தசபைகள் இரவலாக உதவிவருகின்றன. ஏனெனில், அங்கே 6,521 கத்தோலிக்க விசாரணைப்பங்குகள் தங்களுக்கென்று சொந்தக்கோவில்கள் இல்லாதிருக்கின்றன.

> "ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

# நாடுகள் உங்களைக் காத்திருக்கின்றன

அருளப்பபாப்பரசர் சென்ற ஐப்பசிமாதம் 11-ந்திகதி ஞாயிறுவாரம் 314 குருமாருக்கும், 183 கன்னியாஸ்திரிமாருக்கும் மிஷன் சிலுவைகளை வழங்கியபோது, வத்திக்கானில் நடந்தேறிய திருவைபவத்திலே திருச்சபை சகல சாதிசனங்களுக்கும் பொதுவாய் இருக்கும்தன்மை அத்துணை தெளிவாகக் காட்சியளிக்கலாயிற்று இந்தஎதிர்கால மிஷனரிமார் இன்னுமே வேதபோதக நாடுகளென்று கருதப்படுகின்ற அநேகநாடுகள் உட்படப் பலநாடுகளைச்சேர்ந்தவர்கள். வருங்காலத்தில் இவர்கள்தொண்டாற்றவிருக்கும் இடங்கள் அதிகம்வடபாலுள்ள எஸ்கிமோவர்களின் நாடுமுதல் ஆஸ்திரேலியாவின் உள்நாடுவரையிலும், ஏறக்குறைய ஆபிரிக்காமுழுவதும், தூரகிழக்கிலுள்ள அநேகமானநாடுகளிலும், மத்திய, தென்னமெரிக்காவிலுள்ள அநேகபகுதிகளிலுமாக அகிலமுழுவதுமே பரந்திருக்கின்றன. முன்சொன்ன மிஷனரிய குருமாரும், கன்னியாஸ்திரிமாரும் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், ஆசியாவிலும், ஆபிரிக்காவிலுமுள்ள 24 நாடுகளைச் சேர்ந்தவர்கள். அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்திலே பாப்பரசரின் பலிபீடத்தில் பரிசுத்தபிதா நிறைவேற்றிய திவ்வியபூசையுடன் திருவைபவம் ஆரம்பமாயிற்று. அதன்மேல்அவர் வெண்மையான லோகப்பொருள்கொண்டு செய்யப்பெற்ற சிலுவைகளை ஓர்விசேஷ செபஞ்சொல்லி ஆசீர்வதித்ததும், புதிய மிஷனரிமார் இருவர்இருவராக முன்சென்று முழந்தாட்படியிட்டு அவரிடமிருந்து சிலுவைகளைப் பெற்றுக்கொண்டார்கள். பின்பு அவர் சகலசாதிசனங்களுக்கும் சுவிசேஷத்தைப் போதியுங்கள் என்ற இரட்சகரின் திருவாக்கை எடுத்துக்கூறி, "பிரியபுதல்வர்களே! புதல்விகளே! நாடுகள் உங்களைக் காததிருக்கின்றன; கிறீஸ்துநாதரின் இதமானசெய்தியுடன்சேர்த்து, உண்மையான சமாதானத்தையும், அமைதியான முன்னேற்றத்தையும் அவர்களுக்குக்கொண்டு வருவீர்களாக!" என்பனவாகக் கூறிநின்ருர்.

—✻—

# 12-ம் பத்திநாதரும் ரோமை நகரும்

பரமபதம்அடைந்த 12-ம்பத்திநாதபாப்பானவருக்குஒருஞாபக சின்னம் நிறுவுமாறு ரோமை நகர்விக்காரியத்தால் அனுப்பப்பட்டுள்ள ஆலோசனை ஒன்று ரோமைநகரசபைக்குச் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. ரோமைநகரிலேயேபிறந்தகாலஞ்சென்றபாப்பானவர் அந்நகரமக்களுக்குத் தம்மைஎப்போதுமே — விசேஷமாய் இரண்டாவது உலகயுத்த பயங்கர கஷ்டங்கள் மிகுந்தவருடங்களிலே ஓர் அருமைபெருமையானவராக ஆக்கிக்கொண்டார். ரோமைநகர் ஓர்திறந்தநகராகப் பிரகடனஞ்செய்யப்பட வேண்டுமென்று அவர் வீரத்துவமாக வாதாடியதும், அந்நகரிலே அநேகம் வெடிகுண்டுகள் வீசப்பட்டபோது அவர்கொண்ட பரிதாபமும், கவலையும் "ரோமைநகரின் காவலர்" என்ற புகழ்நாமத்தை அவருக்கு ஈட்டிக்கொடுத்தன. ஆலோசனை கூறப்பட்டுள்ள இந்தஞாபகசின்னம் அவர்நாமத்தைத் தாங்கியிருக்கும். அந்நகரிலே இருகட்டடநிலையங்களை நன்கொடையாகப்பெற நகரசபையின் அங்கீகாரம் வேண்டப்படும். இவற்றில்ஒன்று நகர 'ஒலிம்பிக்' விளையாட்டுக்கிராமத்தில் அமைந்துள்ளது. இது ஓர்கோவில்கட்ட உபயோகிக்கப்படும். மற்றது, நகரின் தென் சுற்ருடலிலுள்ளது. இது வயோதிகர்விடுதி ஒன்று அமைக்கப் பிரயோகிக்கப்படும்.

—✻—

# அருளப்பபாப்பரசரை அழையுங்கள்

சோவியற்பிரதமர் குருஷேவின் விஜயத்தால் ஏற்பட்டவிளைவை எதிர்கொண்டு நேராக்கும்படி அருளப்பபாப்பரசர் ஐக்கிய அமெரிக்க தேசத்துக்கு விஜயஞ்செய்ய வேண்டுமென்று நியூயோக்நகரில்பிரசுரமாகும் 'அமெரிக்கன்' என்றபத்திரிகை கூறுகின்றது. வாஷிங்ரன் நகரிலே நிகழும் கார்த்திகைமாதம் 20-ந்திகதியன்று அமலோற்பவ நாயகியின் தேசிய திருசேத்திரத்தைப் பிரதிட்டை செய்யும்படியாக அவர் வந்தால் அஃது "ஓர் ஆச்சரியகரமான காரியமாயிருக்கு"மென்று அப்பத்திரிகை கூறியிருக்கிறது. "நாஸ்திகத்தின் பிரதிருபமும், அதனைப் பிரதிபலித்துக் காட்டுகிறவருமான ருஷிய குருஷேவுடைய விஜயத்தின்பின்னர் கடவுளின் பிரபலிக்கமான ஓர்மனுஷரும், மாபெரும் கிறீஸ்தவசபையின் தலைவரும் காட்சியளிப்பது நமக்கெல்லாம் பெரிதும்நன்மைபயக்கக் கூடியதாயிருக்கும்" என்றும் அப்பத்திரிகைகூறியது.

### ஆங்கிலத்தில் முதற் சொற்பொழிவு

ரோமாபுரியிலுள்ள வடஅமெரிக்க குருமடத்தின் நூற்ருண்டுவிழாவைக் கொண்டாடிய அமெரிககருக்கு அன்று ஞாயிற்றுக்கிழமை அருளப்பபாப்பரசர் அளித்தபேட்டியிலே முதன்முதலாக ஆங்கிலபாஷையில் தமது சொற்பொழிவை நிகழ்த்தினர். அது அறுநூறு வார்த்தைகள் கொண்டஓர்சொற்பொழிவாகும். மறுநாட் திங்கட்கிழமை முதல் நாளிலும் அதிகதொகையினராக வந்துகூடிய அமெரிக்கருக்கு அவர்திரும்பவும் ஆங்கிலபாஷையிலே பேசுகையில, நேற்றைத்தினம் தாம்பேசிய திருத்தமற்ற ஆங்கிலத்தையிட்டு மன்னிப்புக்கோரி, "மிகஅநேகமான இலக்கணப்பிழைகள் இருக்கின்றன" என்று விளக்கிக காட்டினர். "ஆனல், நாம்உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிரும்; நாம் ஆங்கிலத்தை நன்ருகப் படிகக வேண்டியவராய் இருக்கிரும்" என்று மேலும்அவர் கூறலாயினர் பாப்பரசர் மதுகாரியதரிசியான மொன்சிஞ்ஞோர்தோமஸ் றையன்சுவாமியாரிடம் ஆங்கிலம் கற்றுவருகின்ருர்.

---

### கேரள தேர்தல் எச்சரிக்கை

அடுத்தவருடம் மாசிமாதத்தில் கேரளாவில் நடக்கப்போகும் இடைக்காலதேர்தலிலே கத்தோலிக்கர்யாவரும் கம்யூனிஸ்தசார்பில்லாத கட்சிகளுககு மட்டுந்தான் வாக்களிக்கவேண்டுமென்று அவ்விராச்சியத்திலுள்ள பதினன்கு கத்தோலிக்க அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் சேர்ந்து ஓர்பொதுநிருபம் விடுத்துள்ளார்கள். சொந்தக்கட்சிப் பெயரில் வெளிப்படையாக நிற்கும் கம்யூனிஸ்தகட்சிக்கும்சரி, சுயேச்சையாகவோ, அன்றேல் வேறுபுதுக்கட்சிகளின் பெயரிலோநிற்கும் கம்யூனிஸ்த அபேட்சகர்களுககுஞ்சரி 'வோட்'போடலாகாது. புதுவையில் கம்யூனிஸ்தர்கள் "மக்கள் முன்னணி" என்ற மறைமுகப்பெயரில் நின்றனர். சென்றதேர்தலில் கேரளாவிலே "ஐக்கியமுன்னணி" என்ற பெயர்கொண்டு தோன்றினர். ஆகவே, இத்தகைய சாலவித்தையால் மக்கள் மயங்கிவிடக்கூடாது. கம்யூனிஸ்தர்களுக்கு மாருகப்போடும் தங்களுடைய 'வோட்டு'கள் சிதறிவிடாமலிருக்குமாறு பார்த்துக்கொள்ளுதல் அவசியம். கம்யூனிஸ்தசார்பு சிறிதுமற்ற ஜனநாயக ஆட்சிமுறையை அமைக்கவல்ல கட்சிகளைத்தான் ஆதரிக்கவேண்டும். இவ்வாருக அவர்கள் தங்கள் பொதுநிருபத்தில் தெரிவித்திருக்கிருர்கள்.

---

● சமீபத்திலே அருளப்பபாப்பரசரின் பேட்டிபெற்றவர்களில் ஆபிரிக்காவிலே சூடான்நாட்டிலுள்ள முஸ்லீம் காத்மியா சமயபிரிவினரின் தலைவரான சேயெத் அலி மிர்கானியும் ஒருவராவர். இவர் தனதுபுதல்வர்கள் இருவரோடும், இத்தாலியிலுள்ள சூடான் நாட்டுஸ்தானிகர்உட்பட அதிகாரபூர்வமான ஓர்கோஷ்டியினரோடும் சென்று பாப்பரசரின்பேட்டி பெற்றுக்கொண்டார்.

## கார்த்திகை மாதம்

**பொதுக்கருத்து:** உலக அரசியல் அமைப்புகளைக் கவிழ்த்து ஒழிக்கப் பொதுவுடைமைசெய்யும் முயற்சிகளை முறியடிப்பதற்காக வேண்டிக் கொள்வது.

**வேதபோதக கருத்து:** மடகஸ்கார் தீவிலே தனிவாழ்விலும், பொது வாழ்விலும் கிறீஸ்தவ மனப்பான்மை ஆழமாகப்பதியும்படியாக மன்ருடிக் கொள்வது.

சத்திய வேத
பாதுகாவலன்
1959-ம் ஆண்டு
கார்த்திகைமாதம் 5-ந் திகதி

## ஒருநாளும் மறக்கவேண்டாம்

"மாதாவைஒருநாளும் மறக்க வேண்டாம்" என்பது அருமையான ஓர் சுலோகம். அதுபோலக கார்த்திகைமாதம் பிறப்பதையிட்டு "ஆத்துமாக்களை ஒருநாளும் மறக்கவேண்டாம்" என்று மற்ருேர் புதிய சுலோகத்தை ஈண்டுபுகுத்துகின்ருேம். இந்தஆத்துமாக்களில், மாதாமாத்திரமல்ல, பிதா, சகோதரமுதலாம்சுற்றத்தவர்களும், மற்றும் நமது அன்பர்கள், ஞானச்சகோதரர்கள் எல்லவருமே அடங்குவார்கள். மறந்தால்நடப்பது என்ன? நாமும் அப்போது மறக்கப்படுவோம். "உத்தரிக்கிறஸ்தல வேதனை நித்தியமானதாய் இல்லாவிடினும் அதுமிகவும் கொடுமையானது; பூமியில்அனுபவிக்கும் சகலவேதனைகளிலும் அதிகம் உக்கிரமானது; வேதசாட்சிகள் அனுபவித்த வேதனைகளிலும் மிகக்கொடியது"என்கிருர் அர்ச். அகுஸ்தீனர். "நாம் இந்தச் சீவியத்தில் பார்க்கிற, உணருகிற ருசிகரஞ்செய்கிற எல்லாவேதனைகளையும் உத்தரிக்கிறஸ்தல வேதனையுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் உத்தரிக்கிறஸ்தல வேதனை எத்தனையோமடங்கு அதிகமாயிருக்கும்" என்றும் அவரே கூறுகின்ருர். உத்தரிக்கிறஸ்தலத்தில் வேதனை அனுபவிக்கிறவர்கள் யார்? எம்மைப்போல இவ்வுலகில் சீவித்திருந்து அற்பபாவங்களுடன் மரித்தவர்களும், மன்னிக்கப்பட்ட தங்கள் பாவங்களுக்காக முழுதும் உத்தரியாமல் மரித்தவர்களுமே. பிறகு எப்போது மோட்சத்துக்குப் போவார்கள்? அங்கு முழுதும் உத்தரித்தபிறகுதான் மோட்சத்துக்குப் போவார்கள். ஏனெனில், "அசுத்தமுள்ள, பழுதுள்ள எதுவும்மோட்சத்தில் பிரவேசிப்பதில்லை." ஓர்முறை ஓர்மரித்த கன்னியாஸ்திரி தனதுமுகம் அக்கினியால் சூழப்பட்டிருக்கத் தனது சிரேஷ்டரான யேசுவின் அக்னேஸ் தாயாருக்குக் காணப்பட்டு, "என்தாயாரே! உத்தரிக்கிறஸ்தலத்தின் வேதனை எவ்வளவு கொடியதென்பதை மனிதர் நன்கு அறிவார்களேயாகில், அதற்குப் போகாவண்ணம் அவர்கள் தங்களைக் காபந்து பண்ணிக்கொள்வார்கள்" என்ருள். அவர்கள் இவ்வாறு அனுபவிக்கும் கொடியவேதனையைத் தணித்துக்கொள்ளப் பூவுலக வாசிகளின் உதவியைப் பெரிதும் நாடுகின்ருர்கள். "உத்தரிக்கிறஸ்தலத்தில் வேதனைப்படும் ஆத்துமாக்களை மீட்டு அவர்களை மோட்சஇராச்சியத்தில் சேர்ப்பிப்பதானது எல்லாப் புண்ணியங்களிலும் மேலான புண்ணியமாகும்; மரித்தவர்களுக்காக நாம்செபிக்கும்போது, தயாளத்தின் சகலகட்டளைகளையும் நாம் பூர்த்தி செய்கிறவர்களாகிறோம்" என்று அர்ச். பிரான்சீஸ்சலேசியார் சொல்லுகின்ருர். ஆகவே, இம்மாசத்தில் நம்மாலானமட்டும் செபதபம் தானதருமஞ் செய்தும், திவ்வியபூசைகள் வைப்பித்தும், பூசைகண்டு ஒப்புக்கொடுத்தும், பிறநற்கிரிகைகளைப் புரிந்தும் திரளான ஆத்துமாக்களை மோட்சபேரின்ப பாக்கியத்தில் சேர்க்கப் பிரயாசப்படுவோமாக.

வண. எச். பெருசல்சுவாமியாரின்

## தேகவியோகம்

யாழ்ப்பாணநகரிலே, யாழ்ப்பாணக்குடாநாட்டிலே, இல்லை, யாழ்ப்பாணமேற்றிராசன முழுவதிலுமே பிரபல்யமாக அறியப்பெற்றவராய் பெரும்வேதவைராவியாய், ஆன்மவாஞ்சைநிறைந்த ஓர்அருந்தேசிகராய் விளங்கியிருந்துஅரிதானகாரியங்களைச் சாதித்துத்தமதுஅழியாத ஞாபகசின்னங்களை நிலைநாட்டிச் சுகத்தாழ்வுகாரணமாக இற்றைக்குப் பலஆண்டுகளின்முன் தமது சுவநாடாகிய பிரான்ஸ்தேசம் சென்றிருந்த வண. ஹென்றி பெருசல்சுவாமியவர்களை நன்கு அறிந்தவர்களாய், அவர்பால் அன்புபூண்டவர்களாய், இன்னுமேஅவரைத் தங்கள்ஞாபகத்தில் கொண்டவர்களாய் நம்மவருள் இன்றுமே பல்லாயிரக்கணக்கானமக்கள் இருக்கின்ருர்கள். அங்ஙனமாக, இந்தஅருமையான குரவர் பிரான்ஸிலே, பொண்ற்மேயின்எனுமிடத்திலே சென்ற ஐப்பசிமாதம் 21-ந்திகதியன்று மரணத்திரையில் மறைந்தாரென்று எட்டியுள்ள அமங்கல செய்தியை அறியவந்ததும் அவர்களெல்லாம் கவலையேஉருவாய்க் கண்ணீர்பெருக, உள்ளமுருக இறைவனைக் கையெடுத்து, எங்கள் நல்லபிதாவுக்கு நித்திய இளைப்பாற்றியைக்கொடுத்தருளுமென்று ஒரேவாக்காய், ஒரேகுரலாய் இரந்துகொள்வார்களென்று எடுத்துக்கூறவேண்டியதில்லை. 1876-ம்ஆண்டுபிறந்து, 1901-ம்ஆண்டு குருப்பட்டம் பெற்று, 1902-ம்ஆண்டு யாழ்ப்பாணம்வந்துசேர்ந்த சுவாமியவர்கள் முந்த அர்ச். மர்த்தீனர்குருமடத்தில் ஓர்பேராசிரியராயிருந்து, பின்னர்ஊர்காவற்றுறை, மன்னர், வங்காலை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், பரிசுத்த அடைக்கலமாதாகோவில், கொஞ்சேஞ்சிமாதா ஆசனக்கோவில் முதலாம்விசாரணைப்பங்குகளில் ஆற்றிப்போன அருந்தொண்டுகளோ பகருந்தரமன்று, ஊர்காவற்றுறை, பரிசுத்ததேவமாதாவின்கோவில்பலிபீடஸ்தானமணிமாடத்தையும், யாழ்ப்பாணம், பரிசுத்தஅடைக்கலமாதா கோவிலையும் நவமாகக்கட்டியெழுப்புவதிலே அவரின்அயராமுயற்சியும், அருந்தியாகமும், பெரும்பிரயாசையும் இம்மட்டென்று சொல்லுந்தரமன்று. அதனுல் இவ்வாலயங்கள் இரண்டும் அவரது முக்கியத்துவம்வாய்ந்த அழியாதஞாபகசின்னங்களாய் என்றைக்கும் திகழுமென்பதில்சந்தேகமில்லை.

R. I. P.

## ஆசனக்கோவிலிலே சதாசகாயமாதாவின் 400-ம் நோவனைப் பக்திமுயற்சிவிழா



யாழ்ப்பாணம், பரிசுத்தகொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே அர்ச். சதாசகாயமாதாவின் நானூருவது நோவனைப் பக்திமுயற்சிவிழா யாழ்நகரிலும், பிறவூர்களிலுமிருந்து புதன்கிழமைதோறும் பெருந்திரளாக வந்து அதில்கலந்துகொள்ளும் பக்தகோடிகளால் பெருந்திருநாளேபோன்று சென்ற28-ந் திகதிபுதன்கிழமை அதிசிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று. திரிதினஆராதனைகள் காலைதோறும் பாடற்பூசையோடும், மாலைதோறும் செபமாலை, பிரார்த்தனை திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தோடும் நிறைவாகிவந்தன. விழாவன்றுகாலை நிறைவேறிய பெரிய பாடற்பூசையைப் பெருந்திரளான மக்கள்கண்டு, திருவிருந்தருந்தித் தாங்கள் அடைந்துகொண்ட இகபரநன்மைகளுக்காகச் சதாசகாயநாயகிக்குத் தங்கள்இதயபூர்வமான நன்றியைத்தெரிவித்தார்கள். அன்று பகல்முழுவதும் சகாயமாதாவின் பீடம் ஒருதிருசேத்திரம்போலக் காட்சியளிக்கலாயிற்று. பாடசாலைப்பிள்ளைகளும், பக்திக்கூட்டங்களைச் சேர்ந்தவர்களும், மரியாயின்சேனையாரும், ஏனையோரும் கூட்டங்கூட்டமாகவும், குடும்பங்குடும்பமாகவும்சென்று மாதாவின் திருச்சாயலைச்சந்தித்து, செபமாலை செபித்துப் பக்திபண்ணித் திரும்பியவண்ணமிருந்தார்கள். மாலை6மணியளவில் ஆசனக்கோவில் முன்னரெந்தநோவனைப் பக்திமுயற்சியிலும் கண்டிராதவிதமாய் அத்துணைபெருந்தொகையான பக்தர்களால் தேங்கியிருக்க, பல குருப்பிரசாதிகள் பலிபீடஸ்தானத்தில் பிரசன்னமாயிருக்க, விக்கார்ஜெனறல் மிகவண. எச். லெக்குத்துர்சுவாமியவர்கள் குருமாரோடும், பாடகர்குழாமோடும் "தெதேயும்"எனப்படும் தேவதோத்திரகீதம்பாடிச் சிறந்த வேலைப்பாடுடையதாய்த் திவ்விய சிம்மாசனம்போன்று நவமாக அமைக்கப்பெற்று, மின்சார தீபங்களால் சுடருற்றுவிளங்கிய சதாசகாயமாதாவின் பீடத்தை ஆசிர்வதித்தார். அதன்மேல் வழமையான நோவனைப்பக்திமுயற்சி பக்திப்பரவசமாக நடைபெற்றுத் திவ்வியசற்பிரசாத ஆசிர்வாதத்துடன் நிறைவாயிற்று.

## முதல் வெள்ளி முதற் சனி

—*—

**நாளை(6-11-59)வெள்ளிக்கிழமை முதல்வெள்ளி-மறுநாள் முதற்சனி**

தொடர்பாக ஒன்பதுமாதங்களிலே முதல்வெள்ளிக்கிழமைதோறும் திவ்வியநன்மை வாங்குகிறவர்களுக்குப் பாக்கியமான மரணமடையும்வரப்பிரசாதத்தை அருள்வதாக நமது திவ்வியகர்த்தர் வாக்களித்திருக்கிருர்.

தொடர்பாக ஐந்துமாதங்களிலே முதற்சனிக்கிழமைதோறும் திவ்வியநன்மைவாங்கித்தேவஇரகசியங்களைத்தியானித்துக்கொண்டு 15 நிமிஷநேரம் செபமாலை செபிக்கிறவர்களுக்கும் அதேவாக்குத்தத்தத்தைப் பரிசுத்த தேவதாயார் அளித்திருக்கின்ருர்.

## இலவசவிதைநெல் வேண்டுகோள்

காத்திராவண்ணம் பெய்தகடும்மழையினுல் காலபோகவேளாண்மை செய்த கமக்காரர் மிகுந்தகஷ்டத்துக்கும், நஷ்டத்துக்கும் உள்ளாயிருக்கின்றனர். இவர்களுக்கு நஷ்டஈடாக இலவச விதைநெல்வழங்க அரசாங்கம் தகுந்த ஏற்பாடு உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுப் பளைப்பிரிவின் விவசாய ஆலோசனைச்சபை ஓர்பிரேரணையை ஏகமனதாக நிறைவேற்றியிருக்கிறது.

## எதிர்க்கட்சியின் முன்னுள்மந்திரி

முன்னுள் தலதாபனமந்திரியான திருமதி விமலா விஜயவர்த்தன சென்ற வெள்ளிக்கிழமைகூடிய சனப்பிரதிநிதிகள்சபையிலே எதிர்க்கட்சியினருடன் அமர்ந்திருந்தார். திரு. டி. பி. சுபசிங்காவுக்கும், திரு. இரியகொல்லைக்குமிடையே இவருக்கு ஆசனம்அளிக்கப்பட்டது. பாராளுமன்றத்திலுள்ள அரசாங்ககட்சிக்குழு சென்றவாரம் கூடியபோது இவர் அக்குழுவிலிருந்து நீக்கப்பட்டார். குழுவில் இருந்தாருள் 22பேர் இவர்நீக்கப்படுவதை ஆதரித்தும், ஒருவர்எதிர்த்தும் வாக்களித்தனர். 16பேர் வாக்களிக்கவில்லை.

## தபாலிலே தேர்தல் விஞ்ஞாபனங்கள்

சமீபத்திலே நடைபெறவிருக்கும் பாராளுமன்ற உபதேர்தல்களில் போட்டியிடும்அபேட்சகர்கள் தங்களுடையதொகுதிவாக்காளருக்குத் தங்களது தேர்தல்விஞ்ஞாபனத்தையும், தேர்தல்துண்டுப்பிரசுரங்களையும் கட்டணமின்றியே தபால்மூலம் அனுப்பிவைப்பதற்கான சலுகை அருளப்படவிருக்கிருர்கள். அத்துடன் அரசியற் கட்சிகளின் ஆதரவில் போட்டியிடும் அபேட்சகர்களுக்குத் தேர்தல்கட்டுப்பணம் ஆயிரம்ரூபாவிலிருந்து ஐஞ்ஞூறுரூபாவாகக் குறைக்கப்படும். இந்தஉபதேர்தல்களின்போது வாக்களிக்கும் நிலையங்களுக்கு வாக்காளரை ஏற்றிச்செல்ல மோட்டார்தங்களை உபயோகிக்க அபேட்சகர்களுக்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

**HOLY FAMILY CONVENT, JAFFNA**

**ADMISSION FOR 1960**

Entrance Tests for the Primary Eng. School, will be held on Monday 30-11-59 at 9-30 a.m.

Applications should be made on forms available at the Convent Office before 22-11-59.

**Principal.**

## சுதேச வர்த்தமானம்

### சமாதான நீதிபதிகள் மாத்திரமே

அரசாங்கம் இனிமேல் சத்தியக் கம்மிஷனர்களை நியமிப்பதில்லையெனத் தீர்மானித்திருக்கிறது. ஏற்கனவே நியமனஞ்செய்யப்பட்ட சத்தியக் கம்மிஷனர்கள் ஜே. பி. எனப்படும் சமாதான நீதிபதிகளாகத் திரும்ப நியமனஞ் செய்யப்படுவார்கள். வருங்காலத்தில் சமாதான நீதிபதிகளே நியமனஞ் செய்யப்படுவார்கள்.

### வவுனியா இடைத்தேர்தல்

சனப்பிரதிநிதிகள்சபையிலே காலியாயிருக்கும் வவுனியாத்தொகுதி இடைத்தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய தினம் நிகழும் கார்த்திகைமாதம் 26-ந் திகதியென நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. வவுனியாக் கச்சேரியில் நியமனப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

### காலியாயிருக்கும் ஸ்தானங்கள்

தற்சமயம் சனப்பிரதிநிதிகள்சபையிலே கோப்பாய், வவுனியா, அத்தனகலை, கலவீவாத் தொகுதிகளின் ஸ்தானங்கள் நான்கும் காலியாயிருக்கின்றன. கலவீவாத்தொகுதிப் பிரதிநிதியாகத் தெரியப்பெற்றபின் நெடுநாள் சுகவீனமுற்றிருந்தவரான திரு. எம். எஸ். திஸநாயகாவும் கடைசியாகத் தனது பதவியை இராசினாமாச் செய்துள்ளார்.

### நீதியரசர்களுக்குப் பாதுகாப்பு

சுப்பிறீங்கோட்டு நீதியரசர்கள், அமைச்சர்கம்மிஷனர்கள் சகலரினதும் வாசஸ்தலங்களை விசேஷஆயுதந்தாங்கிய பொலிஸ்பகுதியினர் காவல்புரிந்து வருகின்றனர். 24மணிநேரமும் காவல் புரியுமாறு அவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இது ஓர்அத்தியாவசிய பாதுகாப்பு நடவடிக்கையெனத் தெரிய வருகிறது. நீதியரசர் திரு.எச்.டபிள்யு. தம்பையாஅவர்களைக் கொலைசெய்யப் போவதாகப் பயமுறுத்திச் சென்ற வாரஆரம்பத்தில் அவருக்கு அனுப்பப்பட்ட அனுமதேயக்கடிதமே அவர்களின் பாதுகாப்புக்காக எடுக்கப்பட்டுள்ள இந்தநடவடிக்கையின் காரணமாகும்.

### துப்பறியும் நிபுணர்கள்

காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகா படுகொலை விசாரணையிலே இலங்கைப்பொலிசருக்கு உதவிசெய்வதற்காக "ஸ்கொட்லண்ட் யாட்" துப்பறியும் நிபுணர்கள் இருவர் லண்டனிலிருந்து விமானமார்க்கமாகச் சென்ற வியாழக்கிழமை கொழும்புவந்து சேர்ந்திருக்கின்றனர். துப்பறியும் பிரதமஇன்ஸ்பெக்றர் ஜேம்ஸ் மைக்கே, துப்பறியும் இன்ஸ்பெக்றர் ஹேர்பேட் வில்லியம் என்பவர்களே அவ்விருவருமாவர். இவர்கள் திரு. பண்டாரநாயகாவின் கொலைசம்பந்தமாகத் துப்பறியும் வேலையில் எடுத்த நடவடிக்கைகளை ஆராய்ந்து வேண்டியசிபாரிசுகள் செய்து யோசனை கூறுவார்கள். இவர்களிலே மூந்தியவர் இலங்கையிலே ஓர்காலம் ஓர் தோட்டமுதலாளியாய் இருந்தவர்.

## பாப்பிறைவர் பல்லாண்டு வாழி!

— ஆசிநாதன் —

கண்கண்ட தெய்வமெனக் காட்சிதரும் பாப்பு
காவலரும் கோவலரும் கைகூப்பும் மூப்பு
மண்கொண்ட மாமறையின் முடிபுனைந்த வேந்தர்
மாண்புமிகு அருளப்ப நாதரெனும் காந்தர்
பண்பெல்லாம் பட்டொளிரும் பரிசுத்த ஆயர்
பார்ப்பவர்கள் பரவசிக்கும் பாங்குமிகு தூயர்
புண்கொண்ட உலகத்தின் புரைதீர்க்கும் தந்தை
புனிதமொடு வாழியெனக் களிப்போமே சிந்தை.

❁

அன்னையென அறிவுரைகள் ஆற்றுவதில் நல்லார்
ஆன்மநெறி காட்டுவதில் ஆணைகொண்ட வல்லார்
சன்னைசெயும் சக்திகளுக் கடிபணிய மாட்டார்
சற்றேனும் எவரிடத்தும் பகைவெறுப்புக் காட்டார்
என்னதான் வந்திடினும் எதிரிடைக்கு அஞ்சார்
எடுத்துரைத்து அறிவுறுத்த எள்ளளவும் துஞ்சார்
பன்னுமிரு பதின்மூன்றும் அருள்நாத பாப்பு
பரன்அருள்க அன்னார்க்கு நிதம்பாது காப்பு.

❁

எங்களரும் பாப்பிறைவர் வாழ்கவெனச் சொல்வோம்
இன்னல்தரு கொள்கைகளை இவருரையில் வெல்வோம்
தங்கமொடு வெள்ளைநிறக் கொடிபிடித்து நடப்போம்
தந்தையெங்கள் அரசரென்று தகுவிழாக்கள் எடுப்போம்
மங்களமாய் இவர்புகழைப் பரப்புதற்கு உழைப்போம்
மறுமறையோர் இவரடிக்கு அழைப்பதிலே களைப்போம்
துங்கர்அரு ளப்பரையே போற்றலொன்று சேரீர்
தூயருக்குப் பல்லாண்டு கூறுதற்கு வாரீர்!

# தமிழரின் இன்றைய பொருளாதார நிலை

— திரு. இ. இராசதுரை —

இற்றைக்குச் சுமார் முப்பது வருடங்களுக்குமுன் யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில் நீதிபதியாயிருந்தவரும், இலக்கியஇதிகாசத் துறைகளில் மிகவும்கீர்த்திபெற்றவருமான டக்றர் போல் பீறிஸ் அவர்கள் அக்காலத்தமிழரின் கடினமானஉழைப்பையும், சிக்கனமான வாழ்க்கையையும் பார்த்து, பலதிறப்பட்ட இத்தீவின்மக்களுள் இலங்கைவாழ் தமிழன் ஒருகாலம் நிச்சயமாகவே வாழ்க்கையின் அதிமுன்னணியில் நிற்பானென்றுகூறினார். இதோ! இந்நாட்டை ஆளுவானென்றும் கூறினார். அதேகாரணங்களால் உலகமக்கள்பலரும் தமிழ்மக்களை "Scots of the East" "கீழைத்தேச ஸ்கொட்ஸ்"என அழைத்தனர்.

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்னும் பழமொழிக்கேற்ப அக்காலத்தமிழர் ஆறுகள், மலைகள், கடல்கள், சமுத்திரங்கள்தாண்டி, சிங்கப்பூர், மலாயா, பர்மாமுதலிய நாடுகளுக்குப் போய் அங்கிருந்து ஏராளமான பணத்தை வாரிவாரி இங்கே அனுப்பினர். இதன் பயனாய்த் தமிழினம் இந்நாட்டில் வாழ்க்கையின் பிரதானஅம்சங்களாகிய உணவு, உடை, உறையுள் மூன்றிலும் முதற்படியில் இருந்தது. வரண்ட வான்பார்த்த இக்குடாநாட்டில் பொதுவாய் எத்திட்டங்களையும் ரூபாசதப்படி கணக்குப் பார்த்து (They counted everything in rupees and cents) வாழ்க்கையைச் செவ்வனே நடத்தினர். ஆனால், இன்றோ தமிழரது நிலை முற்றாகமாறியுள்ளது. "ஆண்டி அங்கும்கெட்டான்; அவன் இங்கும்கெட்டான்" என்ற பழமொழிக்கேற்பப் பொருளாதார விஷயமாய் அவனது பிறநாட்டுக்கதவுகளும், இந்நாட்டுக்கதவுகளும் அடைபட்டு நாளுக்குநாள் அவனது பொருளாதாரநிலை சீர்குலைந்துபோகின்றது. எங்கள் வருங்காலச்சந்ததி இந்நாட்டில் எவ்வாறு தம்வாழ்க்கையை நடாத்தப்போகின்றார்கள் என்ற மனக்கிலேசம் அநேகர்மனதில் இன்றுஎழுகின்றது. "கோழி மேய்க்கினும் கோறணமேந்திக்கு மேய்க்கவேணும்" என்ற மனப்பான்மை எமக்கிருக்குமாயின் உண்மையாகவே எங்கள்பிற்சந்ததியாரின் வாழ்க்கை பெரும் ஏமாற்றத்திலேயே முடியுமென்பது திண்ணம்.

எனவே, தமிழ்மக்கள் இனியாவது விவசாயம், கைத்தொழில், வியாபாரம்முதலிய தொழில்களிலேயே பெரும்பாலும் ஈடுபடவேண்டும். எங்கள்பாடசாலைகளில் தொழிற்கல்விக்கே முதலிடம் கொடுபடவேண்டும். இடமில்லாமல் தேம்பிவழியும் எம்பாடசாலைகளின் மாணவர் வாழ்க்கையில் தம்எண்ணம் நிறைவேறுததின்பயனாய் ஏமாற்றமடையாமல் தற்பொழுதே காலத்தின்கோலத்தை அறிந்து தம் இடைவேளைகளில் கமத்தொழில், கைத்தொழில் முதலியதொழில்களில் ஈடுபடவேண்டும்.

விசேஷமாய்த் தமிழினம் இனியாவது ஆடம்பரவாழ்க்கையை அறவேஒழிக்கவேண்டும். ஆனால், இதற்குமாறாக இன்று நாம் காண்பதென்ன? எங்கள்தெருக்களில் நடமாடும் விதம்விதமான கார்களையும், துவிச்சக்கரவண்டிகளையும், விசேஷமாய் எங்கள்பெண்களின் உடுப்புகளையும், ஆபரணங்களையும், படமாளிகைகளின் முன் கியூவரிசையில் நிற்கும்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## ஞானோபதேசப் பரீட்சை 25-11-59

நாலாம் வகுப்புத் தொடக்கம் S. S. C. வகுப்பு ஈறாக உள்ள கத்தோலிக்க பிள்ளைகளின் தொகையை வகுப்பு வகுப்பாகக் குறித்து 13-11-59-க்குப் பிந்தாது அனுப்பி வைக்கும்படி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

S. S. C., Prep. S. S. C., J. S. C. வகுப்புகளில் வேறு ஞானோபதேசத் திட்டங்கள் பின்பற்றப்பட்டால் அவை எவையென்று விபரமாகக் குறிப்பிடவேண்டும்.

**PHILIP PONNIAH,**
Gen. Manager, R. C. Schools
Jaffna, 3-11-59.

### துக்கப்பாடற்பூசை

யாழ்ப்பாணம், பரிசுத்த அடைக்கலமாதாகோவில்விசாரணைப்பங்குக் கிறீஸ்தவர்களின் அழியாத ஞாபகத்துக்கும், அன்புக்குமுரியவரான வண. எச். பெருசல்சுவாமியவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நிகழும் கார்த்திகைமாதம் 7-ந்திகதிசனிக்கிழமை காலை 6-30மணிக்கு ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேற விருப்பதாக அறிகின்றோம்.

### பாப்பரசரின் … …

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கணித்தாயுள்ள கட்டடங்களின்தொகுதியில் கிறீஸ்துநாதர் பிலாத்தினிடம் ஏறிச்சென்ற மரத்தாலாய படிக்கட்டுகள்வைக்கப்பட்டுள்ளன. இங்குசெல்லும் யாத்திரிகர்கள் மிகப்பக்திமரியாதையுடன் இப்படிக்கட்டுகளைத் தங்கள்முழங்கால்களினால் நடந்து சென்றுகடப்பர். இப்படிக்கட்டுகளின்மேல் மிகப்பரிசுத்தமானதாகக் கருதப்படும் அழகியதோர் சிற்றாலயமொன்றுண்டு. இங்கு 'மனிதகரங்களால்' வரையப்படாததெனக் கருதப்படும் திருமீட்பரின் திருவுருவப் படமொன்றுண்டு. இது மிகஅருமையாகவே பொதுமக்களின் பார்வைக்கெனத் திறந்துவைக்கப்படுகின்றது. இரும்புக்கிறுதிகளின் பாதுகாப்பில் சாதாரணமாக மறைத்துவைக்கப்பட்டிருக்கும் இத்திருஓவியம் சமீபத்தில் 1950-ம்ஆண்டிலே பரிசுத்தவருடத்தைத் திருச்சபை அனுட்டித்தபோது ஊர்வலமாக லத்தறன்ஆலயத்துள் கொண்டு செல்லப்பட்டுப் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது.

அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்திற்போலவே இங்கும் பலதடவைகளில் நிலத்தை அகழ்ந்து ஆராய்ச்சிகள் நடாத்தியதன்விளைவாக அழியாப்புகழுடைய பலபுராதனப்பொருட்களும், வேதகலாபனைகளின்போது சத்தியத்திற்காகச் செத்துமடிந்த எண்ணரியபுனிதர்களின் ஆஸ்திகள்பலவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றினைத் தன்னகத்தே கொண்டுள்ளதன் விளைவாகத் திருச்சபையின் இருளடைந்த காலத்தில் நடைபெற்ற வீரத்துவமிக்க வரலாறுகளை இன்றும் வெளிப்படையாக எடுத்தோதிக்கொண்டிருக்கும் இம்மகாதேவாலயம் கத்தோலிக்க ஆலயங்கட்கெல்லாம் தாயும், எசமானியுமானதென அழைக்கப்படுவதில் தவறில்லையன்றோ!

— தமிழாக்கம்: எஸ். எம். ஜே.

# நித்திய நகரமாகிய ரோமாபுரி

— லோகநாதன் —

(சென்றவாரத் தொடர்ச்சி)

ரோமாபுரியில் ஏராளமாகப் பொருட்காட்சிச்சாலைகளும், கலாபவனங்களும் இருக்கின்றன. அவற்றை எல்லாம் பார்க்கவேண்டுமானால், அங்கு பலமாதக்கணக்கில் தங்கவேண்டும். ரோமாபுரியிலே நான்முதலில்பார்த்தது "போர்கீஸ்" பொருட்காட்சிச்சாலையாகும். அதிலேயே கலாபவனமும்இருக்கிறது.

13-வதுநூற்றாண்டிலே இத்தாலியில் பிரபலமான ஒருபெரிய – அந்தஸ்து உயர்ந்த குடும்பத்தின் பெயர்தான "போர்கீஸ்" என்பது. இந்தக்குடும்பத்தினரின் கலைப்பொருட்களே இக்காட்சிச்சாலையில் இருக்கின்றன. இக்குடும்பத்தைச்சேர்ந்த கமில்லோ பிலிப்போ லுடோவிகோ போர்கீஸ் என்பவர் பிரான்ஸிய இராணுவத்தில் பெரிய பதவி வகித்தவர். அந்தக்காலத்திலே நெப்போலியனின்சகோதரி பாலைன் என்பவளை மணந்தார். அழகியும், நெப்போலியனின் சகோதரியுமான பாலைனின்சிலையும் போர்கீஸ் பொருட்காட்சிச்சாலையில் இருக்கிறது.

பொதுவிலே இக்காட்சிச்சாலையுள்ள மாளிகை அழகானது. இங்கு அற்புதமான பலஓவியங்களைப் பார்த்துரசிக்கலாம். இக்காட்சிச்சாலையில் சலவைக்கற்சிலைகள் உள்ளபகுதி என்னைப்பெரிதும்கவர்ந்தது. பலசிலைகளும், ஓவியங்களும்நிறைந்த இந்தப்பொருட்காட்சிச்சாலையை அரியதொரு கலைப்பொக்கிஷம்என்றே கூறிவிடலாம்.

"சென்பீற்றர் இன் செயின்ஸ்"- சங்கிலியால் கட்டப்பட்டுள்ள அர்ச். பேதுருவானவர் என்று குறிப்பிடப்படும் கிறிஸ்தவதேவாலயத்திற்கும் சென்றிருந்தேன். ரோமைநகரில் அர்ச். பேதுருவானவரைச் சங்கிலிகளினால் கட்டி இழுத்துவந்த பழையவரலாறு அப்போது என்ஞாபகத்திற்கு வந்தது. இங்குதான் இரண்டாவதுஜூலியஸ் பாப்பாண்டவரின் கல்லறையும் இருக்கிறது. அழகாக எழுப்பப்பட்டுள்ள இத்தேவாலயத்தின் ஒருபகுதியில் எல்லோரதுகவனத்தையும் இழுக்கிறது மோசேஸ் சுரூபம். அளவில் பெரியதும், சலவைக்கல்லில் செதுக்கப்பட்டிருப்பதுமான இச்சுரூபம் மிகச்சிறந்த கலைப்படைப்பாகும். பிரசித்திபெற்றசிற்பி மைக்கேல் ஆஞ்சலோஎன்பவரின் கைவண்ணத்தின்சிறப்பை இச்சிலை இன்றும் காட்டிக்கொண்டிருக்கிறது. அறையதினமே அர்ச். பாவிலுவானவர் மகாதேவாலயத்தையும் பார்த்தேன். இதுவும் வெகுஅழகாக இருக்கிறது.

பரீஸ்நகரைப்போலவே இங்கும் வாழ்க்கைச்செலவு அதிகந்தான். உணவுமுதல் பலமுக்கியபொருட்களின் விலை ஏறியேயிருக்கிறது.

பரீஸ்நகரைப்போலவே இங்கும் ஆங்கிலம்அறிந்தவர்கள் மிகவும்குறைவு. ஆங்கிலத்திற்குப்பதிலாகப் பிரான்ஸிய மொழிஅறிந்த இத்தாலியர்கள்அதிகம் என்பதை விசாரித்து அறிந்துகொண்டேன்.

ரோமாபுரியைவிட்டுப் புறப்பட்டதும் என்மனக்கண்முன் வைபர்நதியும், அந்நகரின் அழகியபொதுச்சதுக்கங்களும், ஊற்றுகளும், அரண்மனைகளும், பெரியபெரிய கிறிஸ்தவதேவாலயங்களும், புராதீனமான ரோமாபுரிச்சின்னங்களும், சிலைகளும், சித்திரங்களும், சிற்றுண்டிச்சாலைகளும் பூவிற்கும்பூங்கோதைகள் நடமாடும் தெருக்களும் ஒன்றுக்குப்பின் ஒன்றாகத் தோன்றிமறைந்தன. மீண்டும் ஒருமுறைரோமாபுரிக்குவந்து எல்லாவற்றையும் ஆறஅமரப் பார்க்கவேண்டுமென்ற எண்ணத்துடன் எகிப்தின்தலைநகராகிய கெய்ரோவைநோக்கி விமானத்திலே புறப்பட்டேன்.

(முற்றிற்று)

# மருதமடுத் திருப்பதியில் கத்தோலிக்க ஆசிரியர்களின் ஞானஒடுக்கம்

"பிற்போக்கிலுள்ள பிள்ளைகளின் இயல்புகளைத் தகுந்தமுறையில் ஆராய்ந்தறியாமல், அவர்களை மட்டி— மடையன்— துட்டன் எனப் புறக்கணிப்பதானது முற்றும் முறைகேடான செயலாகும். அவ்விதம் காணப்படும் பிள்ளைகளை ஆசிரியர்கள் அன்புடனும், பொறுமையுடனும் அணுகவேண்டும். குற்றங்குறைகளை அனுதாபவிலக்கத்துடன் ஆராயவேண்டும். செபத்தின் வல்லமையால் திருத்த முயலவேண்டும்."

இவ்வாறு மருத மடுத்திருப்பதியில் நிகழ்ந்த கத்தோலிக்க ஆசிரியர்களின் ஞானவொடுக்கத்தின் போது, அதன் போதகர்வண. சற். என். குரூஸ்சுவாமியவர்கள் செய்த பிரசங்கத்தில் கூறினின்றார்.

### சிறுவர் நகரம்

தொடர்ந்து பேசுகையில், "இதே அனுசரணையில் அமெரிக்காவிலுள்ள சிறுவர்நகரத்தில் பாலியகுற்றவாளிகளையும், அடங்காச்சிறுவரையும் பரிபாலித்துத் திருத்திவரும் வண பற்றிக் பிளனிக்கன் சுவாமியார் தமதுஅரியசாதனைகளால் அப்பிள்ளைகளை ஆச்சரியகரமான முடிவுக்கு வழிநடத்திச் சென்றிருக்கிறார். அவாதுகுறிக்கோள் 'துட்டப்பிள்ளை என்றொரு பிள்ளை இல்லை" என்பதுவே. அதாவது துட்டத்தனம் வளர்ந்தவர்களிடத்திற்றான் வயிரம் பெறுகிறது. ஆனால், சிறுவரிடத்திலோ களைந்தகற்றக் கூடியதாயிருக்கிறது."

"நான்காம்வயதளவில் தாய்தந்தையரைஇழந்து, துட்டரோடுசேர்ந்து, வங்கிகள், கடைகள், காரியாலயங்களைக் கொள்ளையிட்டும், சூறையாடியும் பிரபலிக்கமடைந்த எட்டுவயதுப் பாலியன் ஒருவனைப் பொலிசர் திருத்திக்கொள்ளவியலாது, முன்னர்காட்டிய சிறுவர் நகரிலே பற்றிக்சுவாமியாரின் பார்வையில் விட்டுவைக்கநேர்ந்தது. முதல்வருடத்திலே அப்பையன் தன் கையில் அகப்படுவதையெல்லாம் உடைத்தும், எறிந்தும் கூழிப்பேய்போல் நடமாடிவந்தான். என்றாலும் அதிபர்மனந்தளராது, தமதுஇடையறாத அரவணைப்பாலும், வேண்டுதலாலும் அச்சிறுவனின் போக்கை ஊகித்துக் கண்டறியாமல் விடவில்லை. துட்டர்ஏவுதல்களில் முன்பின்யோசியாமலேஇறங்கும் (அமைச்சல்) மனப்பான்மைதான் அவனை இந்த விபரீதபோக்குக்கு வழிநடத்திச் சென்றுவிட்டதென்பதைப் பையனுக்குணர்த்திவிட்டார். இதேஅமைச்சல் போக்கை இனிவரும் நல்லேவுதல்களுக்குப் பயன்படுத்திப்பழகினால், பிற்காலத்தில் ஓர்உந்நதநிலைபாதத்துக்கு வருவாய் என்று அவ்வரியசுவாமியார் அச்சிறுவனுக்குப் புத்திபுகட்டினார். கடவுள் அருள்புரிந்தார். பையன் உணர்ந்துகொண்டான். கல்வியும், பண்பாடுகளும் வளமடைந்தன. காலம்உருண்டது ஈற்றில் இராணுவத்தில்சேர்ந்து உயர்வடைந்து பலமகிமைப்பதக்கங்களைப் பெற்றுவிளங்கலானான். எனவே, எவரையேனும்மட்டி, மடையன், துட்டன் என்று புறக்கணியாது அவரிடத்துள்ள திறமைகளை நுணுகி ஆராய்ந்து வழிநடத்துங்கள். எப்பிள்ளைகளிடத்தும் மோட்சம்சேரவேண்டிய அழியாத ஆத்துமம் உண்டென்பதை மறவாதேயுங்கள்....."என்றுவற்புறுத்தினார்.

### ஆசிரியர்கள் பொறுப்பும் முன்மாதிரியும்

ஆசிரியர்கள் காட்டவேண்டிய முன்மாதிரிகையைப் பற்றிப் பேசுகையில் "அன்றொருநாள் யேசுவை அணுகிக் கொண்டுநின்றகள்ளங்கபடமற்றபிள்ளைகள் இன்று உங்கள்வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள்உள்ளங்களைத் தகுந்தமுறையில் பண்படுத்திச் சருவேசுரனிடத்துக்கு வழிகாட்டிச் செல்லும் உந்நதபொறுப்பு உங்களைச் சார்ந்திருக்கிறது. அச்சிறுவரின் வருங்காலவாழ்வைப் பிரகாசிக்கச்செய்யும் அடிப்படையிலே உங்கள்போதனையும், சாதனையும் வழிகாட்டுமானால் நீங்கள் பாக்கியம் பெற்றவர்கள்தான். ஆனால், அந்த மாசற்றஇருதயங்களைக் கேட்டின்வழிக்கு இட்டுச்செல்வதாயிருந்தால், அதைப்போன்ற நிர்ப்பாக்கியம் வேறில்லை. ஏனெனில், 'இச்சிறியோரில் ஒருவனுக்கு இடறலாயிருப்பவன் எவனோ அவன்கழுத்தில் ஏந்திரக்கல்லைக்கட்டிச் சமுத்திரத்திற் தள்ளப்படுவது நன்றாகும்' என்பது திருவாக்கு.

### கத்தோலிக்க ஆசிரியர்கள்

கத்தோலிக்க ஆசிரியர்கள் தங்கள் முதலஆசிரியராகிய யேசுக்கிறீஸ்துநாதரையே பின்பற்றிநடக்க வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். அத்துடன் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளையும் அவ்வழியே கூட்டிச்செல்லும் பொறுப்பும் அன்னாருக்குண்டு. இத்தொடர்பிலே ஞானோபதேசம்கற்பிக்கவும், பத்திச்சபைகளில் சேர்ந்துழைக்கவும், பூசைப்பலி, தேவநற்கருணை ஆசீர்வாதமமுதலாம் ஆராதனை வழிபாடுகளில் பங்குபற்றவும் கடமைப்பாடுடையோராகிறார்கள். இவைகள் யாவும் சன்மானத்தையோ, சம்பளத்தையோ எதிர்பார்த்துச்செய்யும் பணிகள்அல்ல. கூலிக்கு வேலைசெய்பவர்கள்தான் இவைகளை எதிர்பார்ப்பார்கள். ஆசிரியர்களின்சேவை மகத்தானது. குருத்துவபதவிக் கடுத்தது.

ஞானவொடுக்க போதனைகள் அத்தனையும் அமுதைத் திரட்டிச்சொரிந்த தேன்பாகாகும். அவற்றை இன்னும் விரிப்பின் இப்பத்திரமே இடந்தராது. மகாவந். யாழ்ப்பாண மேற்றிராணியாண்டவர் அவர்களும் ஒருநேரம் சமுகந்தந்து நன்மதியூட்டினார்கள். மனமுவந்து உதவிபுரிவதினாலேயே நாம் கத்தோலிக்கர்என்பதைக் காட்டவேண்டும் என்பது அவரின்உள்ளீடாகும்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

மட். தாண்டவன்வெளித் தபால்

# மிஷன் ஞாயிறு

தாண்டவன்வெளிப்பங்கைச் சேர்ந்தோராகியநாம் "மிஷன் ஞாயிறு" என்று அழைக்கப்படுவதாகிய வேதப்பரப்புதல் ஞாயிறுவாரத்தைச் சிறப்பாகஅனுசரித்தோம். இத்தினத்துக்கு ஆயத்தமாகத் திரிதின ஆராதனைகள் வழமைபோல நடந்தேறின. மிஷன்ஞாயிறன்று அதிகாலை 5-30 மணிக்கு முதல்பூசை நமதுபங்குக்குருவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக் சுவாமிகளால் நிறைவேறியது. வேதப்பரப்புதல்பற்றிப் பிரசங்கஞ்செய்யப்பட்டது. அதன்மேல் கிழக்குஇலங்கைப்பாடசாலைகளின் பொதுமுகாமைக்காரர் வண. ஈ கிறவுதர்சுவாமிகளால் 2-ம்பூசை பாடற்பூசையாக நிறைவேறியது. பூசைமுடிவில் மிஷன் நாடுகளுக்காக வேண்டுதல்செய்யும்பொருட்டுத் திவ்வியநற்கருணை எழுந்தேற்றஞ்செய்து வைக்கப்பட்டது. அன்றுபகற்பொழுதுமுழுவதும் பாடசாலைகளையும், பத்திச்சபைகளையும் சேர்ந்தவர்களும், பங்குக்கிறீஸ்தவர்களும் முறைமுறையாகச்சென்று செபவேண்டுதல்கள் செய்து ஒப்புக்கொடுத்தனர். கட்டளைக்குரவர் காலை7-30மணியளவில் ஆயித்தியமலைச் சதாசகாயமாதா ஆலயத்தில் வழமைப்பிரகாரம் பூசையைநிறைவேற்றினார். பிற்பகல்4-30 மணியளவில் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. வேதப்பரப்புதலுக்கானநிதி சேகரித்தற்பொருட்டு எதிர்வரும் 31-10-59சனிவாரம் பிற்பகல் 3மணிமுதல் இரவு7மணிவரையும், அடுத்தநாளாகிய ஞாயிறன்று காலை 8மணிமுதல் நண்பகல் 12மணிவரையும் கிளென்னிஆண்பாடசாலை மண்டபத்திலும், மைதானத்திலும் விநோதவிற்பனவு நடாத்துதற்கு வேண்டிய ஆயத்தங்கள் நடைபெற்றுவருகின்றன.

**யோசேவாஸ் வாலிபர்சங்கம்:** நமதுபங்கில் நீண்டகாலம் நிலவிவந்த ஓர்குறை மிஷன்ஞாயிறன்று நிவிர்த்திசெய்யப்பட்டது. வாலிபர்களுக்கென ஓர்சங்கம் இப்பங்கிலுள்ள வாலிபர்களின் முயற்சியால் உருவாக்கப்பெற்றது. அன்றுபிற்பகல் ஆசீர்வாதத்தின்பின் வாலிபர்கள் கிளென்னி ஆண்கள்கழக மண்டபத்தில் கட்டளைக்குரவர் தலைமையில்கூடினர். கட்டளைக்குரவர் தமதுதலைமையுரையில், எதிர்காலம் நமதுபங்கின் ஞானவளர்ச்சி வாலிபர்களாகிய உங்களில்தான் தங்கியுள்ளதென எடுத்துக்கூறிச் சங்கத்தின் நோக்கம்பற்றியும், வாலிபர்கள் செய்யவேண்டிய பணிகள்பற்றியும் விளக்கினர். அதன்மேல் சங்கஉத்தியோகஸ்தர் தேர்தல்நடைபெற்றது. அதன் முடிவுகள்பின்வருமாறு:

தலைவர்: செல்வர்கள் செல்வம் யோசவ், உபதலைவர்: எஸ். யோசவ் மேரி தவராஜா, இணைக்காரியதரிசிகள்: அலோசியஸ் சந்திரசேகரம், எம். அன்ரனி, தனதிகாரி: சி. எட்வேட்துரைராசா, நிர்வாகசபைஅங்கத்தினர்: எஸ். தோமாஸ், அன்ரனி லீயோ, அன்ரனி பெர்னண்டோ, வீரசிங்கம்.

பின்னர் சங்கத்திற்கு ஓர்பாதுகாவலரைத் தெரிந்தனர். தாண்டவன் வெளிப்பங்கில் நமதுஆலயத்தின் அண்மையில் இரத்தம்சிந்திய ஆசா. யோசேவாஸ்முனீந்திரரை இவர்கள் தெரிந்துகொண்டனர். எனவே, யோசேவாஸ் சங்கம்என இச்சங்கம் அழைக்கப்படும். யோசேவாஸ்முனீந்திரனால் விதைக்கப்பட்டு அவர்தம் இரத்தத்தால் வளர்க்கப்பெற்றஇத்தாண்டவன்வெளிப்பங்கில் தோன்றிய இளம்வாலிபர்கள் அம்முனீந்திரனைக் கண்டுபாவித்து, அவர்வழிகளை — அடிச்சுவடுகளைப்பின்தொடர்ந்து, அவரின் உத்தமசீடராய்ப் பணிபுரிய முன்வருவார்களாக!

நிருபர்.

# புனிதவீரர் பக்கம்

அருளுமைச் சகோதரங்களே!

கார்த்திகைமாதம் உத்தரிக்கிற ஸ்தலத்தில் வேதனைப்படும் ஆத்துமாக்களின் மாதம். அவர்கள் உங்களுடைய உதவியைக் கேட்கிறார்கள். அவர்களுக்கு உதவிசெய்ய நாம்எல்லோரும் கடமைப்பட்டுள்ளோம். சீக்கிரம் அவர்கள் வேதனை நீங்கி மோட்சம் சேரக் கருணை கூரவேண்டும் என்று திவ்வியயேசுவையும், தேவதாயாரையும் தினமும் மன்றாடிவாருங்கள். தினமும் பூசை கண்டு அவர்களது நித்திய இளைப்பாற்றிக்காக மன்றாடுங்கள். உங்களுக்காகவும் ஓர் நாள் அவர்கள் மன்றாடுவார்கள் என்பதை மட்டும் நினைவில் வைத்திருங்கள். உங்கள் அருமைத் தாய் தந்தையர், சகோதரர், உறவினர், சிநேகிதர் எத்தனை பேர் உங்கள் மன்றாட்டை எதிர்பார்த்திருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்வதற்கு இதுவே தக்கதருணம்.

அடுத்தபடியாக, நேற்றையதினம் (4-11-59) நமது பரிசுத்த பாப்பரசர் தினமாகும். அன்றுதினத்தை நீங்கள் எல்லோரும் குதூகலமாய்க் கொண்டாடியிருப்பீர்கள் என்று நம்புகிறேன். அவருக்காகவும், உங்கள் செபவேளைகளில் தினமும் மன்றாட மறவாதேயுங்கள்.

பாப்பரசர் நீடுவாழ்க!

அண்ணா

—*—

## வாட்டம் ஏனோ?

— ஜெகா —

ரவியும், ஜெயமும் நண்பர்கள். ரவி தன்னிடம் என்ன இருப்பினும் தின்பண்டமானாலுஞ் சரி. வேறு எதுவானாலுஞ்சரி நண்பன் ஜெயத்துக்குக் கொடுக்க மறக்கமாட்டான். ரவியின் பெற்றோரும் அப்படியே. அவர்களுக்கும் ஜெயத்தில் ஒரு தனியன்புண்டு. ரவியின் வீட்டில் ஒரு சந்தோஷகரமான தினமானால் அன்று ரவியுடன் ஜெயமுமிருப்பான். ஜெயமில்லாவிடின் ரவி சந்தோஷத்திற்குப்பதில் துக்கமாகவே இருப்பான்.

ஜெயமும் ரவியில் அளவுகடந்த அன்புகொண்டிருந்தான். எதையும் ரவிக்குக் கொடுக்க மனதுடனிருந்தான். ஆனால், ஜெயத்தின் பெற்றோர் அதனைக் கண்டித்தனர் ஒரு சுண்ணாம்புத்துண்டுதானும் ஜெயத்தின்கையிலிருந்து ரவிக்கு மாறினால் போதும்; ஜெயத்தின் தந்தை ஜெயத்தை விட்டுவைக்கமாட்டார் இவ்விதமான அ ர க் க மனப்பான்மை ஜெயத்தின் தந்தை சாமிநாதரிடமிருந்தது. இச்சூழ்நிலையிலும் இவர்கள்நட்பு கிளைத்தோங்கி வளர்ந்தது.

அன்று சனிக்கிழமை. ஜெயத்தின் வீட்டில் ஒரே அமர்க்களம். பல வகையான தின்பண்டங்களைச் சாமிநாதர் தமது மக்களுக்குப் பரிமாறிக்கொண்டிருந்தார். ஜெயத்தின் சகோதரர்கள் மிக மகிழ்ச்சியாய்ச் சாப்பிட்டுக்கொண் டிருந்தனர். ஜெயத்தின் முகத்திலோ வாட்டம். அவ்வாட்டத்திற்குக் காரணம், நண்பன் ரவி. நிமிடங்கள் உருண்டன. ஜெயத்தின் வீட்டுவாசலில் ரவி நின்றுகொண்டிருந்தான். ஜெயத்தின் முகத்திலோர் மலர்ச்சிக்குறி தோன்றி மறைந்தது. அதற்குக் காரணம், அவன்தந்தை சாமிநாதர் பக்கத்தில் நின்றுகொண்டிருந்ததுதான். ரவி ஜெயத்தைச் சைகையாலழைத்தான். இதனைச் சாமிநாதரின் கண்கள் கண்டுவிட்டன. மறுகணம் அவர் வாயிலிருந்து காரசாரமான சில சொற்கள் வெளிவந்தன.

"நேரம் பார்த்து வந்துவிட்டாயா? உனக்கு என்னடா வேணும்? உங்களுக்கெல்லாம் பொல்லடி தந்து அனுப்பவேணும்; உனக்கு இங்கே என்ன வேலை? பிச்சைக்காரப் பயலே!" என்று அலறியேவிட்டார்.

ரவியின் கண்களில் நீர் மல்கியது. வீட்டைநோக்கி ஓடினான். இச்சம்பவத்தைப் பார்த்த ஜெயத்தின் தம்பி தாசன் பேசாமடந்தையாக அசந்து நின்றுவிட்டான். இருபது நிமிடங்கள்பறந்திருக்கும். சாமிநாதர்அறையுட் சென்றார். ஜெயம் வெளிவாசலில் தனது நண்பன் ரவியைத் தன் தந்தை ஏசியதைஎண்ணிச் சோகமே உருவாகநின்றுகொண்டிருந்தான்.

வாயிற்கதவு திறந்தது. ரவி கையில் மூன்று அப்பிள் பழங்களுடன் ஜெயத்திடம் ஓடிவந்து அவற்றை அவனது கைகளில் திணித்துவிட்டு,

"இன்று என்மாமனார் கொழும்பிலிருந்து வந்தார்; அப்பிள் பழங்கள் கொணர்ந்தார்; வீட்டில் உன்னுடன் சேர்ந்து உண்ணலாமென எண்ணி உன்னை அழைக்கவந்தேன்; ஆனால், உனதுதந்தை என்னைத் தவறாக நினைத் தனுப்பிவிட்டார்; சரி, இதை வைத்துக்கொள்" என்று கூறிவிட்டு வீடுதிரும்புவதற்குக் காலெடுத்துவைத்தான்.

"ரவி! என்னை மன்னித்துக்கொள்" என்ற சாமிநாதரின் குரல் கேட்டுத் திரும்பினான். அறையிலிருந்தபடி இருவரின் உரையாடலையும் கேட்டுக்கொண்டிருந்த சாமிநாதர் கண்களில் நீர்சிந்த ஓடிவந்தார்.

"ரவி! என்னை மன்னித்துக்கொள்; உங்களுக்கிருக்கும் இளம் அன்புள்ளம் என்னிடமில்லை; என் கல்நெஞ்சைக் கரைத்துவிட்டாய்" என்று கூறியபடி ரவியை அணைத்துக் கொண்டார்.

## நத்தார் சிறுகதைப் போட்டி

தம்பி தங்கைகளே! உங்களிற்பலர் அழகான சிறுகதைகளை எமக்கு அனுப்பிவைத் திருக்கின்றீர்கள். அவற்றுட்பல மிகநன்றாயிருக்கின்றன. "புனிதவீரர்" பக்கத்தில் உங்களுக்கு ஊக்கமூட்டும்படி சிறுகதைப்போட்டி ஒன்றை ஆரம்பித்துள்ளோம். நீங்கள் அனைவரும் போட்டியில் பங்குபெற வேண்டும் என்பதே எமதுஅவா. யார் நத்தார் பரிசில்பெறும் அதிர்ஷ்டசாலி என்றுதான் பார்ப்போம்.

**போட்டி விதிகள்**

1. மாணவ மாணவிகள் மாத்திரம் இப்போட்டியிற் கலந்துகொள்ளலாம். கதைகள் நத்தார்திருநாளுடன்சம்பந்தப்பட்டிருக்கவேண்டும்.
2. கதைகள்யாவும் கொப்பிஒற்றையில் நாலுபக்கங்களுக்கு மேற்படக்கூடாது. அன்றியும், தாளின் ஒருபக்கத்தில் மாத்திரம் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
3. கதைகள் பாடசாலைத் தலைமைஆசிரியரின் ஒப்பத்துடன் அனுப்பப்பட வேண்டும்.
4. கதைகள் அனுப்பும்போது "புனிதவீரர்" பக்கத்தில் காணப்படும் முகவரியைவெட்டி மேலுறையில் ஒட்டி அனுப்பவேண்டும்.
5. ஆண்களுக்கு ஒருபரிசும், பெண்களுக்கு ஒருபரிசும் வழங்கப்படும்.
6. போட்டிக்கதைகள் அனுப்பப்பட வேண்டியதிகதி 30–11–59. இத்திகதியின்பின் வரும்கதைகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

கதைகள் சேரவேண்டிய முகவரி

நத்தார் சிறுகதைப்போட்டி,
புனித அன்னாள் கோவில்,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

இதைவெட்டி மேலுறையில் ஒட்டி அனுப்ப மறக்கவேண்டாம்.

படவிமர்சனம்


## மார்சலீனோ

ஸ்பானியாவின் புனித பிரான்சிஸ்கு சந்நியாசிகளின் ஆச்சிரமத்துக் கதவு திறந்தது. அதனருகே அதிசயக் குழந்தை. அம்மடத்திலிருந்த சந்நியாசிகள் அத்தனைபேரும் ஆச்சரியவசத்தராய் அற்புதக்குழந்தையை உள்ளே எடுத்துச் சென்றனர். அன்னை தந்தையர் எவரும் குழந்தையைத் தேடிவந்திலர். மடத்திலேயே வளர்ந்தது அச்சிறு அனாதை. இப்பொழுது அவன் ஆறுவயதுச்சிறுவன். திவ்வியயேசு அவனது நண்பர். தாயும், தந்தையுமாய் அந்தச் சந்நியாசிகளிடம் வளர்ந்த அவன் களங்கம் அற்ற இளம் துளிர். அந்த மடத்தின் ஒருகோடியிலே இருளடர்ந்த ஓர் அறை. அங்கு கழித்துவைத்த பழைய பொருள்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. ஆனால், அங்கு ஒருசிலுவை. அதிலே

(அடுத்தபக்கம் பார்க்கவும்)

### உங்களுக்குத் தெரியுமா?

By Scio



[1] வானசாஸ்திரிகள் இன்று தங்களுடைய தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் மூலம் அரைக்கண்ணாலே பார்ப்பதினால் மாத்திரமல்ல, ஆனால், அவைகளைக் கமறாக்கள் எனப்படும் புகைபடம் பிடிக்கும் கருவிகளாகப் பிரயோகிப்பதாலும் தங்கள் ஆராய்ச்சியை நடத்துகிறார்கள். நெடுநேரம் திறந்துவைத்து எடுபடும் பிரதிமைப் படங்கள் அதிகம் விளக்கமற்றனவும், கண்டுகொள்ள முடியாது மனிதகண்ணுக்கு அதிகம் தூரத்திலுள்ளனவுமாய் ஆகாயமண்டலத்திலுள்ள வஸ்துகளின் உருவங்களைப் பதிவுசெய்கின்றன.

[2] பிரயாண விமானங்களின் விமானியான 43 வயதுடைய அமெரிக்க மறியோன் "பாற்" போலிங் என்பவர் சமீபத்திலே இலேசான விமானத்தில் பிரயாணஞ்செய்து உலகில் புதியதோர் சாதனையை நிலைநாட்டுவதற்காக மனிலாவிலிருந்து ஏறிகோனைச் சேர்ந்த பென்டின்ஸ்ரன் நகர்வரை 6,890 மைல் தூரத்தை ஒற்றை எஞ்ஜின் பூட்டிய விமானமொன்றில் இடையிலே தரியாது செலுத்திச்சென்று பிரசித்தி பெற்றார். இவரின் தனிப்பிரயாணத்துக்கு 46 மணி நேரம் பிடித்தது.

[3] நமது உலகம் ஐந்து கண்டங்களையும். 1,00,000–க்கு மேற்பட்ட தீவுகளையும் கொண்டிருக்கிறது. இவைகள் சுமார் 200 நாடுகளாகவும், உரிமையாட்சிப் பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த இராச்சியங்கள் எல்லாவற்றிலும் வசிக்கின்ற 250 கோடிமக்களும் 1,000–க்கு மேற்பட்ட பாஷைகளைப் பேசுகிறார்கள். சுமார் 500 சமயங்களையும், சமயப் பிரிவுகளையும் அனுசரிக்கிறார்கள்.

அறையுண்ட நமது இரட்சகர். அவர் பக்கமாய்ச் சிறுவன் கவரப்படுகிறுன். முதல்நாள்; சிறுவன் மார்சலீனே அப்பம் கொடுத்து யேசுவோடு சம்பாஷித்தான். மறுநாள் முந்திரிகை இரசமும் அவருக்குக் கொண்டுவந்தான். யேசுவும் அதைப் பருகினுர். இந்த நிகழ்ச்சிகள் பல நாட்கள் தொடர்ந்தன. மடாதிபதிகளிடம் ஒரே பரபரப்பு. மடத்திலே அப்பமும், முந்திரிகை இரசமும் காணுமற் போய்க்கொண்டிருந்ததே இப்பரபரப்புக்குக் காரணம். ஆனுல், மார்சலீனே என்ன செய்தான் என்பது அவர்களுக்குத் தெரியாது.

ஒருநாள், அதுதான் மார்சலீனே யேசுவோடு சம்பாஷித்த கடைசி நாள். அன்பினுல் இரு உள்ளங்களும் பிணைந்தன. அந்த அழியா அன்பு மார்சலீனேவை இவ்வுலகை விட்டு எடுத்துவிட்டது. ஆம், திவ்விய இரட்சகரின் கரங்களிலே சயனித்து நித்திய நித்திரையில் ஆழ்ந்தான் மார்சலீனே.

மார்சலீனேவாகப் பாகம் தாங்கி நடிக்கும் சிறுவன் மிகவும் அற்புதமாய் நடித்துள்ளான். நடிப்பிலே ஒருமேதை என்று எண்ணும்படியானது அவன் நடிப்பு. ஹாஷ்யமும், குறும்புத்தனமும் கலந்த நடிப்பு. சிறுவர்களுக்கு உரிய சுபாவத்தை — துடினத்தை அப்படியே படமெடுத்துக்காட்டுகிறது. மார்சலீனேவாக நடித்தவரைக் காலஞ்சென்ற பாப்பரசரே மிகவும் பாராட்டினுர் என்ருல் வேறுஎன்ன சான்றுவேண்டும்? சிறியோருக்கு மாத்திரமன்று, பெரியோரும் பார்க்கவேண்டிய உள்ளத்தைத் தொடும் அற்புத ஓவியம். இது ஓர் இத்தாலிய படம். இதன் தயாரிப்பாளர் இதை மிகவும் கவர்ச்சியாகத் தயாரித்துள்ளனர். கவர்ச்சியான — மக்களை ஈர்த்துவிடக்கூடிய படங்களைத் தயாரிப்பதில் இத்தாலிய படாதிபதிகள் பெருமையுடையவர்கள்.

கத்தோலிக்க திரைப்படங்கள் மிகவும் அருமையாகவே இலங்கையில் திரையிடப்படுகின்றன. எனவே, தருணத்தைத் தவறவிடாமல் யாவரும் பார்த்து மகிழுங்கள் மார்சலீனே திரைப்படத்தை. எதிர்வரும் வெள்ளிக்கிழமை (6-11-59) றீகல் படமாளிகையில் காட்டப்படவிருக்கும் இப்படம் ஆங்கில விளக்கத்துடன் கூடியது. தருணத்தை நழுவவிடாதீர்கள். சிறுவர்களே! சிறுவன் மார்சலீனேவை நேரிலே பார்த்து மகிழுங்கள்.

— காவலூர் யோபு

## 50 ஆண்டு நிறைவுவிழா

**மாத்தளை**

கொழும்பு-சலாபம் ஆகியமேற்றிராசனங்களில் தேவதொண்டுடன் கல்வித் தொண்டுமாற்றி, ஞானக் கல்வியோடு லௌகீக கல்வியையும் புகட்டிச் சிறப்பாகத் தமிழ் மக்களுக்காக அயராது உழைத்த சங். சகோதரர் யோண் பீற்றர், எவ்.பி.எம். அவர்களது சந்நியாச ஐம்பதாமாண்டு நிறைவுவிழா அடுத்த மார்கழித்திங்கள் 19-ம் நாள் வருகிறது.

அன்னுராற்றிய அரும்பெருந்தொண்டுகளை முன்சொன்ன பகுதிகளைச் சேர்ந்தமக்கள் இன்னும் மறந்திருக்கமாட்டார்கள்; மறக்கவும் முடியாது. அவரது இந்தத்தங்கயூபிலி 19-12-59-இல் அவர் சிரேஷ்டராகக் கடமையாற்றும் மரியாயின் பிரான்சீஸ்கன் சகோதரரது தாய்மனையிலே மாத்தளையில் கொண்டாடப்படும். அன்னுரின் அருஞ்சேவையால் பயன்பெற்றேர் அவர் ஐம்பதுஆண்டுகளைத் தேவதொண்டிற்காணவாமருளிய இறைவனுக்கு நன்றி கூறி விழாவுக்குச் சமுகந்தந்து அதனைச் சிறப்பிக்குமாறு வேண்டப்படுகின்ருர்கள்.

## மருதமடுத் திருப்பதியில்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வடஇலங்கையிலே பலவேறு இடங்களிலும் இருந்துவந்த 248 ஆசிரியர்கள் இந்நிகழ்ச்சியில் பங்குபற்றலாயினர். ஞானவொடுக்கம் நடைபெற்ற நான்கு தினங்களிலும் மவுனம் அனுட்டிக்கும்படி கேட்கப்பட்டிருந்தது. போதனைகளும், தியானமும், பக்திமுயற்சிகளும் கிரமமுறைப்படி நடைபெற்றன. ஆசிரியர்களுக்கான சகலசௌகரியங்களும் குறைபாடின்றி ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தன. கடந்தஞாயிறுவாரம் திவ்வியபூசைப்பலி நிறைவேறியதும், ஆசிரியர்கள் அனைவரும் தாங்கள் அடைந்த அருட்பேறுகளையிட்டு ஆனந்தபாஷ்பஞ் சொரிந்தார்கள்.

சுபம்!

ச. சி. நாயகம்

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1987**

யாழ்ப்பாணம், சிறும்பியடி
முருகேசு சின்னத்தம்பி வேலுப்பிள்ளை
— வழக்காளி.

எதிராக
இயக்கச்சி
சின்னக்குட்டி வேலுப்பிள்ளை
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 1987-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1960-ம் ஆடு தைமீ 11-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 345. இன்னும், ரூபா 300-க்கு 3-1-58 தொடக்கம், 28-5-59 வரை 12% வட்டியும், அதற்குப்பின் 5% வட்டியும், இறுபடும்வரையும் செலவு ரூபா 123- 50 சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பச்சிலைப் பகுதி, புலோப்பளைக் கோயிற்பற்று, ஊர்வணிக்கன் பற்று இறை 'புளியடி' பர. நில. இல. $107\frac{3}{4}$. பெரிய தென்டல் பர. நில. இலா. 100. இரு பிரிவுகளும் சேர்ந்து பர. நில. இலா. $207\frac{3}{4}$. இதில் தெற்குப்பக்கமாக பர. நில. இலா. 50-ல் நிந்தமாகப் பர. நில. இலா. 10 பத்து. தென்னைகள், பனைகளும். எல்லை: கிழக்கு — கணபதிப்பிள்ளை சுப்பிரமணியத்தின் உரிமைக்காரருக்கும், மறுபேருக்குமுரிய வாதனம். வடக்கு—சின்னப்பிள்ளை கணபதிப்பிள்ளைக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு—மண்தெரு. தெற்கு—றேட்டு. இதடங்கலும். பதிவு இலக்கம் B. 47/95.

**ஆர். கனகரத்தினம்,**
கோம்மிஷனர்,

நம். 35, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்

## தமிழரின் இன்றைய...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சனங்களின்தொகையையும் பார்க்கும்போது ஈற்றில் இவைகளால் உண்டாகும்பலாபலன்கள் என்னவென்பதை நாம் ஆழமாய் யோசிக்கவேண்டும். பற்பல குடியேற்றதிட்டங்களைத் தமிழ்மக்கள் இனியாவது பயன்படுத்தவேண்டும். குடிசைக்கைத் தொழில்களில்மாத்திரம்தங்காது பலர்சேர்ந்து கூட்டுமுறையாய் அதிகம்ஊதியம் தரக்கூடிய தொழில்ஸ்தாபனங்களை (Large-Scale Factories) நிறுவச்செல்வரான தமிழ்மக்கள் முன்வர வேண்டும்.

சமீபத்தில் தொண்டைமானுற்றில்—அதாவதுவல்லைவெளியில் ஒருநெசவுசாலை, செக்கோசிலவாகிய கைத்தொழில் நிபுணரின் உதவியுடன் நிறுவஇருப்பதாக அறிகின்றேம். தமிழ்மக்கள்யாவரும் ஒன்றுசேர்ந்து கூட்டுமுறையாகச் செவ்வனே இவ்வாலையை நடாத்துவார்களானுல் தமிழ்மக்களுக்கு இதுவருங்காலத்தில் பெரும்நன்மை பயக்கும்என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, தமிழ் மக்கள் இனியாவது காலத்தை அறிந்து ஆடம்பரவாழ்க்கையை வெறுத்துத்தமக்கும், தம்பிற்சந்ததிக்கும் நன்மைபயக்கக்கூடிய கைங்கரியங்களில் ஈடுபடுவார்களென நம்புகிறேன்.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2392.**

காரைநகர் களபூமி
பொன்னையா வேலுப்பிள்ளை
— வழக்காளி.

எதிராக
கொக்குவில் கிழக்கு
1. கனகசபை குலவீரசிங்கமும்,
2. பெண் மருக்கொழுந்துவும்,
3. விசுவலிங்கம் மயில்வாகனம்,
4. விசுவலிங்கம் இரத்தினம்,
அல்லது கனகசபாபதி,
5. விசுவலிங்கம் முத்துராசா.
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2392-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1960-ம் ஆடு தை மாதம் 11-ந் திகதி பிற்பகல் 3 மணிதொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 2490. இன்னும் ரூபா 1500-க்கு 11-8-53 தொடக்கம், 26-6-59 வரை 24% வட்டியும், அதன்பின் 5% வட்டியும், இறுபடும்வரையும் கோட்டுச் செலவு ரூபா 233-59 சதமும்.

### ஆதனடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர்க் கோயிற்பற்று கொத்தன் தோட்டம் பர. நில. இலா. 4. செய்பயிர், வான்பயிர்களும். தென்கிழக்குப்பக்கமாகவிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். இதற்கு எல்லை: கிழக்கும், தெற்கும்—முருகேசு நல்லதம்பிக்கும், பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு—ஒழுங்கை. மேற்கு—நடராசா பெண் சோதிப்பிள்ளைக்கும், அப்பாத்துரை பெண் அன்னப்பிள்ளைக்கும் உரிய காணி. பதிவு இலக்கம் D. 239/196.

**ஆர். கனகரத்தினம்,**
கொம்மிஷனர்.

நம். 35, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

## நேர்த்தியின் பூர்த்தி

சதாசகாயத்தாயே! என்னைக் கஷ்டத்திலிருந்து நீக்கியதற்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்கிறேன். இவ்வளவு காலம் தாமதித்ததற்கு மன்னிப்புக் கேட்கிறேன்.

செ. செபமாலை

திருகோணமலை.

## நம்பிக்கையில்லாப் பிரேரணை

அரசாங்கத்தின்மீது எதிர்க்கட்சியினர் சென்ற வெள்ளிக்கிழமை கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சாதகமாக 43 வாக்குகளையும், பாதகமாக 48 வாக்குகளையும்பெற்றுத் தோல்வியடையலாயிற்று. அதாவது, பிரதமர் தஹநாயகாவின் அரசாங்கம் ஐந்து அதிகப்படியான வாக்குகளால் ஆட்சியை நிலைநாட்டிக்கொண்டது.



திரு. ஆ. வஸ்தியாம்பிள்ளை
யோசேப்பு தத்துவராசா அவர்களின்

## அமரதின நினைவு

**10-வது ஆண்டு நிறைவு ஞாபகம்**

| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 10-7-1908 | 9-11-1949 |

பூலோக சீவியத்தைவிட்டுப் பிரிந்த வஸ்தியாம்பிள்ளை யோசேப்பு தத்துவராசாவுடைய ஆத்துமத்திற்குப் பரலோக வாசலைத் திறந்து, நித்திய பரமானந்தத்தைக் கட்டளைபண்ணியருளும், ஆமென்.

இதனைக் கண்ணுறும், வண. குருப்பிரசாதிகள், சங். சந்நியாசர், கன்னியாஸ்திரிமார், இனசன நண்பர்கள், மற்றும் யாவரும் இவருக்காக மன்றுடும்படி பரிவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேம்.

இவரின்
நேச மனைவி—மக்கள்.

உதயதிசை, ஊர்காவற்றுறை.

## நன்றித் துதி

யேசுவின்திரு இருதயத்திடமும் பரிசுத்த சகாயமாதாவிடமும் நான்கேட்ட மன்றுட்டு எட்டுநாளில் கிடைத்தது. நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

யேசுவின் ஊழியக்காரி
**L. P: Hattaw.**

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2760
**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**
மானிப்பாய்
நாகலிங்கம் சுப்பிரமணியம்
—வழக்காளி

எதிராக
யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி றேட்,
சின்னத்தம்பி இராசேந்திரம்
—எதிராளி

யாழ்ப்பாணம், டிஸ்திறிக் கோட்டின் M. B. 2760-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1959-ம் ஆண்டு மார்கழிமாதம் 10-ந் திகதி (10-12-59) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அக்காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபா 1345. இதில் ரூபா 1000-த்திற்கு 19-3-59 தொடக்கம் 19-5-59 வரையும் 100 க்கு 18% வட்டியும் பின் தீர்வைக் கூட்டுத் தொகையில் இறுபடும்வரைக்கும் 100 க்கு 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 176 சதம் 85.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை, தென்மேற்கிறை வெள்ளைச் சூரிதறையும், வெள்ளைச் சூரிவயலும் ப. நெ. இ. 4. வீடும், கிணறும், செய்பயிர்,வான்பயிர்களும்.எல்லை:கிழக்கு—றேட்டும், நாகமுத்து பெண் மாணிக்கத்தினுதனமும். மேற்கு—குளமும்; வண்ணை வைத்தீஷ்பரன் கோவிலாதனமும். தெற்கு—அப்புத்துரை பெண் கமலாட்சிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் நாலில் ஒருபங்கு.

**தா. செல்லையா,**
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
No.37. கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 5-1959.